

கோகுலம்
GOKULAM மே '99 ரூ. 6/-
யூடிஐ வழங்கும் வண்ண லேபில்கள் உள்ளே!
விடுமுறை எக்ஸ்பிரஸ்!


அறிமுகம்
Rasna
AQUA FUN
தெரியுமா நான் ரஸ்னா
அக்வா ஃபன் குடித்த போது!
எப்படி
உணர்ந்தேன் என்று?
நான் ஆழ்கடலில் மூழ்கியதுபோல் உணர்ந்தேன். அங்கே ஒவ்வொரு அலையும் என்னுடன் பேசியதுபோல் இருந்தது. அனைத்து பெரிய மற்றும் சிறிய மீன்களும் என் நண்பர்களாகிவிட்டன என்பதை நம்புங்கள். அவை என்னுடன் பேசவும் ஆரம்பித்து விட்டன. பரம ஆனந்தம் எனக்கு. இந்த வண்ணமயமான உலகத்திலிருந்து கிடைத்த தூண்டுதல் மூலமே ரஸ்னாவின் புதிய காம்பினேஷன் ஃப்ளேவர் அக்வா ஃபன் உருவானது. எனவே, இதன் ருசி கடலைப் போல் அற்புதமானது. ஆதலால், கடலின் புத்துணர்ச்சி உங்களுக்காக 32 கிளாஸ்களிலும் ருசித்து அனுபவிக்க.
கடலின் குளிர்ச்சி நிரம்பிய இணையற்ற பானம்!
Mudra RAS 98/318 Tam



கோகுலம்

மே '99 : மலர் 17: இதழ் 4

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

விடுமுறை என்பது உல்லாசமான நாட்கள். ஆண்டு முழுவதும் சிரமப்பட்டு படித்து, பரீட்சையும் எழுதிவிட்டு, "அப்பாடா!" என்று நிம்மதிப் பெருமூச்சுடன் விடுமுறை நாட்களை எதிர் நோக்குகிறீர்கள். நல்லது.

ஆனால் அறுபது நாட்கள் என்பது ஆண்டின் ஒரு மிகப் பெரிய பகுதி மட்டுமல்ல, பல விடுமுறைகளைச் சேர்த்துப் பார்க்கும்போது, உங்கள் வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய பகுதியும் ஆகும்.

வாழ்க்கையின் இந்த நீண்ட பகுதியை பயனற்ற விதங்களில் பாழடித்து விடக் கூடாது. உல்லாசம், உற்சாகம் எல்லாம் தேவைதான். ஆனால் அது மட்டுமே நோக்கமாகிவிடக் கூடாது. உங்கள் உள்ளத்துக்கு மகிழ்ச்சியும் அதே சமயம் உங்கள் அறிவுக்கு உயர்வும் அளிப்பதாக அந்த நாட்கள் அமைய வேண்டும்.

நீங்கள் செய்ய ஆசைப்பட்டு, நேரமின்றி செய்ய முடியாமல் போன பல காரியங்கள் இருக்கும். அவற்றைப் பட்டியலிட்டுப் பார்த்து, எது அதிகப் பயன் தரும் என்ற நோக்கில் செயல்படுவது புத்திசாலித்தனமாகும்.

- சுவாரஸ்யமான, அதே சமயம் தரம் மிக்க புத்தகங்களைத் தேடி எடுத்துப் படிக்கலாம்.
- டீ.வி.யில் அறிவியல் தொடர்பான மிகச் சுவையான நிகழ்ச்சிகள், டிஸ்கவரி, நேஷனல் ஜியோகிராஃபிக் ஆகிய சானல்களில் ஒளிபரப்பாகின்றன. அவற்றைச் சற்று நேரம் பார்க்கலாம்.
- கற்றுக் கொள்ள விரும்பிய கம்ப்யூட்டர் பாடம், அல்லது இசைக் கருவி இவற்றின் பக்கம் கவனம் செலுத்தலாம்.
- தபால் தலை சேகரிப்பது போன்ற பயனுள்ள 'ஹாபி' எத்தனையோ உள்ளன. அவற்றுள் பிடித்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஆர்வத்துடன் ஈடுபடலாம்.
- கிரிக்கெட், டென்னிஸ், ஹாக்கி போன்ற உங்கள் மனம் கவர்ந்த ஏதேனும் ஒரு விளையாட்டை, விளையாட்டாக மட்டுமின்றி, முறையாகக் கற்றுச் சிறக்கலாம்.
- இப்படி யோசித்தால் பல அம்சங்கள் செலவு அதிகமின்றி, நமது கவனத்தை ஈர்க்கக் காத்திருப்பதை உணர்வோம்.

எல்லாவற்றையும் விட முக்கியமான ஒன்று சொல்கிறேன்: உங்கள் பெற்றோரிடம் தினமும் நீங்கள் சற்று நேரம் பேச வேண்டும். உங்கள் பள்ளிக் கூடத்தில் நடந்த சம்பவங்களை நினைவு கூர்ந்து சொல்லலாம். அன்றையப் பொழுதை எப்படி உபயோகமாகச் செலவிட்டீர்கள் என்று விளக்கலாம். அதே போல உங்கள் அப்பாவும் அம்மாவும் அன்று என்ன செய்தார்கள்; ஆபீஸில் அல்லது வீட்டில் அவர்களுக்கு ஏதேனும் பிரச்னைகள் உண்டா என்பதையும் பேச்சு வாக்கில் கேட்டறிய வேண்டும். 'அப்பாபாடு, அம்மாபாடு' என்று இருந்து விடாதீர்கள்! உங்கள் எதிர்காலம் வளமானதாக அமைய அவர்கள் எத்தனை பாடு படுகிறார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். அவர்கள் வாழ்க்கையிலும் மகிழ்ச்சி பொங்க உதவுங்கள். அவர்களுடைய பிரச்னைகளை உங்களால் தீர்க்க முடியாமல் போகலாம்; ஆனால் அக்கறை காட்டுகிறீர்கள் என்பதே அவர்களுக்கு யானை பலம்!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்



இந்த இதழில்

கோகுலம்

மே 1999











பள்ளி விட்டு வந்து கொண்டிருந்த சலீமிடம் சிறிது நேரம் கடையைப் பார்த்துக்கச் சொல்லி விட்டுச் சென்றிருந்த ராவுத்தர் திரும்பி வந்து –
சரி சலீம் நீ வீட்டுக்குப் போ... உன் உதவிக்கு மிக்க நன்றி!
என்ன மாமா பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க..
கலர் பாக்ஸ்
கதை: மழலைப்பிரியன்
படம்:
பள்ளியில்...
ஓவியப் போட்டிக்கு சலீம் சேர முடியாது!
ஏன் காதர்? அவன் நல்லா வரைவானே?
பரிசு எனக்குத்தான்! அவனிடம் தான் கலர் பாக்ஸ் கிடையாதே!
அப்படியா சலீம்?
ஆமாம் சரவணா!
சலீம் வீட்டில் –
அம்மா ஒரு கலர் பாக்ஸ் வாங்கணும்மா!
அதுக்கு ஏதுடா பணம்?


இரண்டு நாட்களுக்குப் பிறகு ராவுத்தர் கடையை சலீமிடம் விட்டுச் சென்றிருந்தார்–
கல்லாவிலிருந்து இந்த ஐம்பது ரூபாயை மட்டும் எடுத்து கலர்-பாக்ஸ் வாங்கினால் யாருக்குத் தெரியப் போகிறது?
அதே சமயம் அடுத்தக் கடைக்காரர் தன் நண்பரிடம் பேசியது சலீம் காதில் விழுந்தது–
நம்ம சலீம் மாதிரி ஒரு நாணயமான பையன் கிடைத்தால்...
நானும் உங்களுடன் அந்த விசேஷத்துக்கு வந்து விடுவேன்
சலீமுக்குச் சுருக்கென்றது~
மாமாவின் நம்பிக்கை மட்டுமில்லாமல் எல்லாருடைய நம்பிக்கை மேலேயும் மண்ணைப் போட இருந்தேனே!
பணத்தைக் கல்லாவில் போட்டான்.


வந்து— மாமா
நன்றி சலீம்!
அப்புறம் இந்தா... உனக் காத கலர்பாக்ஸ் வாங்கி வந்தேன். ஓவியப் போட்டியில் ஜமாய்!
என்னிடம் கலர் பாக்ஸ் இல்லாதது உங்களுக்கு எப்படி மாமா தெரியும்?
சரவணன் சொன்னான்.


என்னை மன்னிச்சுடுங்க மாமா...!
இதி லென்ன மன்னிக்க இருக்கு?...
நீ முதலில் எங்கிட்ட சொல்லியிருந்தா நான் எப்பவோ வாங்கித் தந்திருப்பேன்! சொல்லப் போனா நீ செய்கிற உதவிக்கு இன்னும் எவ்வளவோ வாங்கித் தரலாம்!



நீங்களும் மாஜிக் செய்யலாம்!

நீரில் நடனமாடும் அந்துருண்டை!

தேவையானவை:

1. அந்துருண்டை (நாப்தலின்) ஒன்று
2. கண்ணாடி ஜாடி
3. எலுமிச்சைச் சாறு
4. காய்ந்த முட்டை ஓடு ஒன்று

எப்படி செய்வது?

எலுமிச்சைச்சாற்றை கண்ணாடி ஜாடியில் ஊற்றி வைத்துக் கொள்ளுங்கள். முட்டை ஓட்டை எடுத்துத் தூள் செய்து சிறு துணியில் கட்டி ஜாடிக்குள் போடுங்கள். பிறகு அந்துருண்டையை நண்பர்களிடம் காட்டி இது மூழ்குமா, மிதக்குமா? என்று கேளுங்கள். அவர்கள் மூழ்கும் என்பர். பிறகு ஜாடிக்குள் அந்துருண்டையைப் போடுங்கள். அந்துருண்டை எடையால் மூழ்கும். பார்த்துக் கொண்டே இருங்கள். சிறிது நேரத்தில் மீண்டும் அந்துருண்டை மேலே வரும். பின் மீண்டும் மூழ்கிவிடும்.

எலுமிச்சையில் உள்ள அசிட்டிக்



அமிலமும் முட்டை ஓட்டிலுள்ள கால்சியம் கார்பனேட்டும் வேதிவினை புரிந்து கார்பன்-டை ஆக்சைடை உருவாக்குகிறது. இந்தக் கார்பன்-டை ஆக்சைடு வெளியேறும்போது அந்துருண்டை மேலே வருகிறது. கார்பன்-டை ஆக்சைடு வெளியேறிய பின் மீண்டும் அந்துருண்டை அதனுடைய எடையால் மூழ்குகிறது.



ஊசியால் குத்தினாலும் வெடிக்காத பலூன்!

ஊசியால் குத்தினால் பலூன் எப்படி வெடிக்காமல் போகும்? என்ற உங்களது கேள்வி புரிகிறது. நீங்களே செய்து பாருங்கள்.

தேவையானவை :

1. பலூன்
2. செல்லோடேப்
3. குண்டூசி

எப்படி செய்வது?


பலூனை நன்றாக ஊதிக் கொண்டு அதன் மேல் சிறு, சிறு துண்டுகளாக செல்லோடேப்பை ஒட்டி விடுங்கள். (இது உங்கள் தம்பி தங்கைகளுக்குத் தெரிய வேண்டாம்).

பிறகு தம்பி, தங்கைகளிடம் பலூனைக் காட்டி குண்டூசியால் குத்தினாலும் பலூன் வெடிக்காது என்று கூறுங்கள். முதலில் அவர்கள் நம்ப மாட்டார்கள். பிறகு நீங்கள் குண்டூசியை செல்லோடேப் ஒட்டிய பகுதியில் குத்துங்கள். பலூன் வெடிக்காது. எல்லோரும் மகிழ்வார்கள்.

காரணம்?

குண்டூசியால் குத்தப்படும் இடத்தில் பலூனின் ரப்பர் விரிவடைந்து வெடிக்காதபடி, ஒட்டப்பட்ட செல்லோடேப் தடுக்கிறது.

தீப்பெட்டி



குச்சி இல்லாத தீப்பெட்டி டப்பாவை எடுத்துக் கொள்ளுங்கள். உள் பெட்டியின் அடிப்பக்கத்தில் 50 பைசா நாணயத்தை வைத்து மூடி விடுங்கள்.

உங்கள் நண்பர்களிடம் தீப்பெட்டியைப் பாதி திறந்து காட்டி விட்டு இந்தத் தீப்பெட்டியை மூடி எத்தனை முறை மேலிருந்து கீழே போட்டாலும் படம் உள்ள பகுதியே மேலே வருமாறு செய்ய முடியுமா? என்று கேளுங்கள். முடியவே முடியாது என்பார்கள்.


நீங்கள் பலமுறை தூக்கிப் போட்டுக் காட்டுங்கள். ஒவ்வொரு முறையும் படம் ஒட்டிய பகுதியே மேலே தெரியும்.

காரணம்?

தீப்பெட்டியின் அடியில் 50 பைசா நாணயம் உள்ளதால் அதன் எடை அடிபக்கமாகவே விழுகிறது.

— அ.வ. நாயகம், தஞ்சை

சார் தபால்



மாது என்ன செய்யப் போகிறான்?

ஏப்ரல் மாத கோகுலத்தைப் பற்றிய தங்களது கருத்துக்களை வாசகர்கள் சொல்கிறார்கள்.

"ஏப்ரல் மாத கோகுலம் அட்டையில் உள்ள வண்ண மீன்களின் படத்தை கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. அத்தனை அழகு! கணக்கு மிஷின், என் பங்கு, சிந்துபாத், நட்புக்காக படக்கதைகள் பார்க்கவும் படிக்கவும் நன்றாக இருந்தன" என்கிறான் சாத்தூரில் இருக்கும் எஸ்.எச்.என். எட்வர்ட் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் **செ. சரவணக்குமார்.**

தூத்துக்குடி ஜான்சன் ஆங்கிலப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் **க. சௌம்யா** "மீன் வளர்ப்பில் பண்டைக் கால ஜப்பானியர்களையும் சீனர்களையும் குறிப்பிட்ட கோகுலம் நம் முன்னோர்கள் கோயில் தெப்பக்குளங்களில் மீன்கள் வளர்த்ததை சொல்லவில்லையே! கோயிலுக்குச் சென்றால் மீன்களுக்குப் பொரி வாங்கிப் போடுவது எங்களைப் போன்றவர்களுக்கு ரொம்ப மகிழ்ச்சியான செய்தி தெரியுமா? எல்லோர் வீட்டிலும் எலியாரின் அட்டகாசம் உண்டு. அதை அழகிய கவிதையாக்கிய கவிஞருக்குப் பாராட்டுகள்!" என்று கூறுகிறாள்.

"உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் இத்தனை வகை வீடுகளா? என்று ஆச்சர்யத்தில் திறந்த வாயை நான் மூட வெகு நேரமாயிற்று. பாதுகாத்து வைக்க வேண்டிய பகுதி. எனக்கு முழு ஆண்டு தேர்வு துவங்க இருப்பதால் படைப்புகளை அனுப்ப கால தாமதமாகும்" என்று சொல்கிறான், மதுரையிலிருக்கும் **ஆர்.வி. மயில்வாகனன்.**

"அட்டையில் போட்டு பாராட்ட வேண்டிய 'அணில் கும்ளே' படத்தை சத்தமில்லாமல் உள்ளே போட்டுள்ளீர்களே! இது நியாயமா?" என்று ஆதங்கப் படுகிறார்கள் சித்தோவிருக்கும் **பவித்ரா, சந்திரன், சுபாஷினி, ஹரிஹரன்.**



தோட்டப்பாளையம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் **இரா. ஜெயசித்ரா,** "கோகுலத்தில் அறிவியல் செய்திகள், துணுக்குகள், கோகுலம் க்விஸ், நியூஸ் போன்றவை என்னைப் போன்ற மாணவர்களுக்குப் பொது அறிவை வளர்த்துக் கொள்ளும் விதத்தில் வருகிறது" என்கிறாள்.

"எங்கள் பள்ளியில் நடந்த பாவை விழா மற்றும் கல்கி நூற்றாண்டு விழா பற்றிய செய்திகளையும் புகைப்படத்தையும் வெளியிட்டதற்கு மாணவர்கள், ஆசிரியர்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறுகிறான் மேட்டூர் அணை வைத்தீகவரா பள்ளி மாணவன் **நாகராஜன்.**

ஒகூரிலிருக்கும் **பி. கோவிந்தசாமி** "ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற வண்ண மலர்களின் ஓவியங்கள் அனைத்தும் அழகாக இருந்தன" என்கிறார்.

"பாவம் போக்கும் பாலசித்தராகவும் தேச விரோதச் செயல் புரியும் பூபதியிடமும் மாது படும் அவஸ்தையைப் பார்க்கப் பாவமாக உள்ளது. இதில் மாதுவின் பெற்றோர்கள் வேறு கடத்தப்பட்டிருக்கிறார்கள். அடுத்து என்ன நடக்குமோ? என்று மே இதழை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறுகிறார் தேத்தாக்குடி தெற்கிலிருக்கும் **ஆர். ராஜ குமாரன்.**



சிங்கனின் சாதுர்யம்!

ஜானகி மணாளன்

சுவர்ணபுரி என்ற நாட்டின் அரசன் ஸ்வேத குமாரன். அவன் பார்வைக்கு நல்லவன் போல் இருப்பான். ஆனால், மிகவும் கபட குணம் கொண்டவன். அவனது செயல்கள், சொல்வது ஒன்று; செய்வது வேறாக இருக்கும்.

அவன் அரண்மனையில் சிங்கன் என்ற ஒரு காவலாளி இருந்தான். அவன் மிகவும் நல்லவன். நேர்மையானவன். சாதுர்யம் மிக்கவன். இக்கட்டான நேரங்களில், அவனுடைய நுண்ணறிவே அவனுக்குக் கைகொடுத்து விடும்.

இருந்தாலும், ஒரு சமயம், ஏதோவொரு வழக்கில் அவன் தன்னை அறியாமல் சிக்கிக் கொண்டு விட்டான். அதை விசாரித்த அரசன், அவனுக்கு மரண தண்டனை விதித்து விட்டான்.

அதைக் கேட்டுச் சிங்கன் மிகவும் வருந்தினான். சபை கலைந்ததும், அரண்மனைக் காவலாளி என்ற சிறப்புச் சலுகையில் அனுமதி பெற்று, அரசனைத் தனியாகச் சந்தித்தான் சிங்கன்.

“அரசே! நான் ஒரு பிழையும் செய்யவில்லை. சந்தர்ப்பவசத்தால் வழக்கில் சிக்கிக் கொண்டு விட்டேன். தயவுசெய்து, என்னை மன்னித்து, என் தூக்குத் தண்டனையை ரத்து செய்து உதவ வேண்டும்” என்று கெஞ்சினான் சிங்கன்.

அதற்கு அரசன், “இருக்கலாம்... ஆனால், சபையினர் முன், நான் விசாரித்த போது, உன் நியாயத்துக்குச் சரியான சாட்சி இல்லையே! எனவேதான், நான் உனக்கு மரண தண்டனை விதித்தேன். அதை எப்படி நானே மாற்ற முடியும்...?” என்றான்.

உடனே சிங்கன், “அரசே! நான் ஒரு பாவமும் அறியாதவன். என்னை நீங்கள் காப்பாற்றியே ஆகவேண்டும்...” என்று, அரசன் காலில் விழுந்து விட்டான்.

அரசன் அதற்கெல்லாம் மயங்குபவன் இல்லை. அவன் மனத்தில் சிங்கனைக் காப்பாற்றும் எண்ணம் சிறிதும் இல்லை. அவன் தான், கபட குணம் உள்ளவன் ஆயிற்றே... எனவே, இரக்கம் கொண்டவன் போல் நடித்தான்.

“சரி... தீர்ப்பை என்னால் மாற்ற முடியாவிட்டாலும், உனக்காக ஒன்று வேண்டுமானால் செய்யலாம்...” என்ற அரசன், “நாளைக்கு அதே சபையினர் முன், திருவுளச் சீட்டைக் குலுக்கிப் போடுகிறேன்... ஒன்றில் ‘தண்டனை’ என்று எழுதப்பட்டிருக்கும். இன்னொன்றில் ‘விடுதலை’ என்றிருக்கும். நீயே ஒன்றை எடு. உன் விதி எப்படியோ அப்படி ஆகட்டும்” என்றான்.

சிங்கனுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. இருந்தாலும், ‘தண்டனை’ என்ற சீட்டு வந்து விட்டால்...? அவனுக்குப் பயம் வந்தது.

சிங்கனுக்கு ஒரு உயிர் நண்பன். அரண்மனையில் அரசருக்கு மிக நெருக்கமான பதவியில் இருந்தான்.

நள்ளிரவு நேரம். அவன் சிறைக்கு வந்து, சிங்கனைச் சந்தித்து ஆறுதல் கூறினான்.

உடனே சிங்கன், தான் அரசரைச்

சந்தித்ததையும் அப்போது நடந்த உரையாடலையும் விளக்கினான்.

பொறுமையாகக் கேட்டுக் கொண்ட நண்பன், "நம் அரசரிடம் ஒரு பிடிவாத குணமும் உண்டு. தான் அளித்த தண்டனையை அவர் மாற்றவே மாட்டார். எந்த வகையிலாவது அதை நிறைவேற்றியே தீர்வார். ஆகவே, உனக்குத் தூக்குத் தண்டனை நிச்சயம்" என்றான்.

"அது எப்படி முடியும்..? திருவுளச் சீட்டில் 'விடுதலை' என்று வந்து விட்டால், என்னை அவர் விடுவித்துத்தானே ஆக வேண்டும்" என்றான் சிங்கன்.

"அதெல்லாம் நேர்மையான குணம் உள்ளவர்கள் செய்வது. நம் அரசர் அப்படிப்பட்டவர் இல்லை. உனக்கு 'விடுதலை' என்ற சீட்டு வருமாறு நிச்சயம் செய்ய மாட்டார்..."

"அது எப்படி முடியும்..?" என்றான் சிங்கன் அப்பாவித்தனமாக.

"நம் அரசர் என்ன செய்வார் தெரியுமா..? இரண்டு சீட்டிலுமே 'தண்டனை' என்று எழுதி விட்டால் உன்னால் என்ன செய்ய முடியும்? எதை எடுத்தாலும் உனக்கு மரண தண்டனை தானே! அவரிடம் போய், முதலில் இரண்டு சீட்டையும் பிரித்துக் காட்டுங்கள் என்று கேட்க முடியுமா? அல்லது பிற்பாடு இன்னொரு சீட்டில் என்ன எழுதியிருக்கிறது என்று கேட்டு விடத்தான் முடியுமா? மீறிக் கேட்டால் என்ன ஆகும் தெரியுமா? 'திருவுளச் சீட்டெல்லாம் வேண்டாம்; நான் சொன்னதுதான் சட்டம்.. உனக்குத் தூக்குத் தண்டனைதான்' என்று சாதித்து விடுவாரே..!" என்றான்.

சிங்கனுக்கு அப்போதுதான் அரசனின் கபடம் புரிந்தது.

நண்பன் தொடர்ந்தான். "ஆகவே, இந்த ஆபத்திலிருந்து தப்பிக்க, ஏதாவது வழியை நீ யோசித்து வைத்துக் கொள். வரட்டுமா?" என்று விடைபெற்றான்.

இரவு முழுவதும், சிங்கன் மூளையைப் போட்டுக் கசக்கிக் கொண்டான். ஒரு வழியும் புலப்படவில்லை.

மறுநாள் சபை கூடியது. நல்ல கூட்டம். சிங்கன் அழைத்து வரப்பட்டான்.

உடனே அரசன் சிங்கனிடம் இரக்கம் கொண்டவன் போல் நடித்து, "இவனைப் பார்த்தாலும் பாவமாகத்தான் இருக்கிறது. எனவே, திருவுளச் சீட்டு போட்டுப் பார்த்து விடலாம். அவன் விதி எப்படியோ அப்படியே நடக்கட்டும்" என்றான்.



அதைக் கேட்டதும் சபையினரிடம், சிங்கனின் அதிர்ஷ்டம் எப்படி உள்ளது என்பதை அறியும் ஆவல்!

அரசர் தனக்கு எதிரில் இருந்த சிறு மேடை மீது இரண்டு சீட்டுகளையும் குலுக்கிப் போட்டார்.

அவற்றைக் கண்டதும் சிங்கனிடம், தன் நண்பன் கூறியது போல், 'இரண்டு சீட்டிலும் 'தண்டனை' என்றே எழுதியிருப்பாரோ?' என்ற சந்தேகம். துணிந்து எப்படி அரசரைக் கேட்பது?

அரசன் சொன்னான்: "இரண்டில் ஒரு சீட்டை நீயே எடுத்துப் பிரித்துப் படி!"

சிங்கன் சீட்டை எடுக்க மேடையருகில் போனான். அப்போது திடீரென்று அவனுடைய நுண்ணறிவு வேலை செய்தது. அவன் மூளையில் ஏதோ ஒரு 'பளிச்!' – 'ஏன் இப்படி செய்தால் என்ன?'

உடனே அவன் அரசனிடம், "மன்னவா! நான், இதிலிருந்து ஒரு சீட்டை எடுப்பதற்கு முன், தங்களிடம் ஒரு சிறு கோரிக்கை. எனக்கு ஒரு மெழுகுவர்த்தியும் தீப்பெட்டியும் தரச் சொல்லுங்கள்" என்று வேண்டினான்.

அவை தரப்பட்டவுடன், பதற்றமில்லாமல் சிங்கன் ஒரு தீக்குச்சியை எடுத்து மெழுகுவர்த்தியை ஏற்றினான்.

பிறகு, அதை வணங்குவது போல் பாசாங்கு செய்து விட்டுச் சபையினரை நோக்கி, "இந்த



இரண்டு சீட்டில் ஒன்றில் 'தண்டனை' என்றிருக்கிறது. மற்றொன்றில் 'விடுதலை' என்றிருக்கிறது. அதாவது ஒன்றின் மூலம் எனக்குச் சாவு. இன்னொன்றின் மூலம் எனக்கு வாழ்வு. ஆகவே" என்று இன்னும் ஏதோ சொல்ல வந்தவன் போல் நடித்து, சட்டென்று இரண்டில் ஒரு சீட்டை எடுத்து, எரியும் மெழுகுவர்த்தியில் கொளுத்தி விட்டான். சீட்டைப் பிரிக்கவே இல்லை. அது எரிந்து சாம்பலாயிற்று.

அதைக் கண்ட மன்னன் மிகுந்த கோபமுற்றான். "நீ ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கூச்சலிட்டான்.

அதற்கு சிங்கன் நிதானமாக, "அரசே! என்னுடைய மரணச் சீட்டை நானே எடுத்துப் படிக்கும் தைரியம் எனக்கு இல்லை. ஆகவே சற்று அதிகப்படியாக நடந்து கொண்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்றான்.

"சரி, இனி நான் உனக்குத் 'தண்டனையா, விடுதலையா' என்று எப்படி நிர்ணயிப்பேன்?" என்றான் அரசன் எரிச்சலுடன்.

"அது மிகச் சுலபம் அரசே!" என்ற சிங்கன், "நீங்கள் ஒரு சீட்டில் 'விடுதலை' என்றும், மற்றொன்றில் 'தூக்குத் தண்டனை' என்றும் தானே எழுதியிருந்தீர்கள்...?" என்றான்.

"ஆமாம்....! அதில் என்ன சந்தேகம்? அப்படித்தான் எழுதியிருந்தேன்" என்று வாக்கு மூலம் கொடுத்தான் அரசன்.

"அப்படியானால் இதோ கிடக்கும் இன்னொரு சீட்டில் இருப்பதற்கு நேர் எதிரான கட்டளைதானே, நான் எடுத்து எரித்த சீட்டில் இருந்திருக்க வேண்டும்?"

அரசன் குழம்பிப் போனான். அவனுக்கு வேறு வழி ஏதும் இருக்கவில்லை. எனவே, "ஆமாம்" என்று ஒத்துக் கொண்டான்.

உடனே சிங்கன், "இந்தச் சீட்டில் உள்ளதை நீங்களே எடுத்துப் படியுங்கள்" என வேண்டினான்.

அரசன் இரண்டு சீட்டிலும் 'தண்டனை' என்று எழுதியிருந்தான் அல்லவா? எனவே, மேடை மீது கிடந்த சீட்டிலும் அதுதானே இருக்கும்...! தான் ஏமாந்து போய் விட்டதை வெளிக்காட்டிக் கொள்ளாத அரசன், அந்த இன்னொரு சீட்டை எடுத்துப் படித்தான். அதில் 'தண்டனை' என்றிருந்தது.

அப்படியானால், சிங்கன் எரித்த மற்றொரு சீட்டில் 'விடுதலை' என்றுதானே இருந்தாக வேண்டும்?

அரசன் வேறு வழியின்றி சிங்கனை விடுதலை செய்து விட்டான். சிங்கனின் சாதுர்யம் அவனைக் காப்பாற்றி விட்டது!



புதிர் உலகம்

மீதியின்றி...

111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999 என்ற இந்த எண்களை மீதியின்றி வகுக்கக் கூடிய எண்களை உங்களால் கூற முடியுமா? ஆனால் விடை 1 என்றோ, 111 என்றோ சொல்லக் கூடாது. எங்கே முயற்சி செய்து பாருங்கள்!

ஏ.எஸ். யோகானந்தம்,
ஔளைவயார்பாளையம்

விடை: 3 மற்றும் 37 என்ற எண்களால் வகுத்தால் மீதி வராது.

சதுரத்தை நிரப்புங்கள்!

1 லிருந்து 9வரை உள்ள எண்களை ஒருமுறை மட்டும் பயன்படுத்தி இச்சதுரத்தை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு வரிசையின் கூட்டுத்தொகையும் 15 வர வேண்டும். எண்களின் இடங்களை மாற்றிக் கொள்ளலாம்.

7	—	—
—	3	—
—	—	5

– மோ. மாணிக்கராஜ், ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
புள்ளமங்கலம்

விடை:

6	7	2
1	5	9
8	3	4

எது பெரியது?

987654321	123456789
087654321	123456780
007654321	123456700
000654321	123456000
000054321	123450000
000004321	123400000
000000321	123000000
000000021	120000000
000000001	100000000

பார்த்தவுடன் சொல்லுங்கள். இடப் பக்கம் உள்ள எண்ணிக்கை பெரிதா, வலப்பக்கம் உள்ள எண்ணிக்கை பெரிதா? விடை தெரியாவிட்டால் கூட்டிப் பாருங்கள்!!

எஸ். ராஜம், காந்தி கிராமம், கரூர்

விடை: இரண்டும் ஒன்றுதான்
1083676269

எண்ணின் சிறப்பு!

15873 இந்த எண்ணின் சிறப்பு பற்றித் தெரியுமா? இந்த எண்ணை 7-ன் மடங்குகளில் பெருக்கினால் வரும் விடையைப் பாருங்கள் புரியும்!

15873 x 7 = 111111

15873 x 14 = 222222

15873 x 21 = 333333

15873 x 28 = 444444

15873 x 35 = 555555

15873 x 42 = 666666

15873 x 49 = 777777

15873 x 56 = 888888

15873 x 63 = 999999

– ஔவை ஏ.எஸ். யோகானந்தம்,
ஔவையார்பாளையம்,
கலிங்கியம்.

எளிமையான கூட்டல்!

உங்கள் நண்பர்கள், தம்பி, தங்கைகளுடன் இந்தக் கூட்டல் கணக்கைப் போட்டு மகிழலாம்.

1. முதலில் உங்கள் நண்பரை மூன்று இலக்கத்தில் ஒரு எண்ணை எழுதச் சொல்லுங்கள் – 532
2. அதற்குக் கீழே, முதலில் கூறிய எண்ணை 999லிருந்து கழித்து வரும் மீதியைப் போடச் சொல்லுங்கள். – 467
3. மீண்டும் உங்கள் நண்பரை மூன்று இலக்க எண் ஒன்றை போடச் சொல்லுங்கள் – 673
4. மீண்டும் அந்த எண்ணை 999 லிருந்து கழித்து வரும் மீதியை எழுதுங்கள் – 326
5. மறுபடியும் ஒரு மூன்று இலக்க எண்ணை எழுதச் சொல்லுங்கள். – 257

ஆக மொத்தம் 2255


இதையே மேலிருந்து கீழ் வரிசையாகக் கூட்டாமல் கலப்பமாகக் கூட்டலாம். எப்படி?

– ப. காளிதாசன், நீர்விளங்குளம்,
புதுக்கோட்டை மாவட்டம்

விடை: முதலில் கடைசியாக எழுதிய மூன்று இலக்க எண்ணின் மூன்றாவது எண்ணிலிருந்து 2 மட்டும் எடுத்துப் போடுங்கள். பின் முதல் இரண்டு எண்களை (25) எழுதுங்கள். கடைசியாக 7–ல் இருந்து 2 ஐக் கழித்து விட்டு 5ஐ எழுதுங்கள். இந்த விடையை வழக்கம் போல் கூட்டிப் பாருங்கள். மிகச் சரியாக இருக்கும்.

இங்கு எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

மோ. மாணிக்கராஜ், 9–ம் வகுப்பு, 'ஆ' பிரிவு
அரசினர் உயர்நிலைப்பள்ளி, புள்ளமங்கலம்



விடை: 26 முக்கோணங்கள்



விடுகதை பக்கம்

மண்ணுக்குள்ளே வெள்ளிக் கட்டி – அது என்ன?



1. காற்றிலே பறப்பேன்
– பட்டமும் அல்ல;
வண்ணங்கள் உண்டு – மலரும் அல்ல;
சக்கரம் உண்டு – வண்டியுமல்ல
– நான் யார்?
2. என் உடலெல்லாம் கண்கள்,
உச்சியிலோ கொண்டை,
கழுத்து நீண்டிருக்கும்,
கார்மேகத்தைக் கண்டால் ஆடுவேன்
– நான் யார்?
3. சட்டையைக் கழற்றத் தெரிந்த
எனக்கு அதைப் போட வழிதெரிய
வில்லை – நான் யார்?

– எம். காத்தவராயன், சித்தணி
அஞ்சல், திண்டிவனம்.

1. திரவத்தால் உயிர் பெறுவான்,
ஊசி முனையில் சாகசம் புரிவான்,
காகிதத்தின் தோழன் – அவன் யார்?
2. ஊசி போன்ற மெல்லுடலாள்,
நாட்டிற்கேற்ப நிறமுடையாள்,
அவளை வெட்டினாலும் வலிக்காது
– அவள் யார்?
3. இதை வெட்டினால் நல்லது;
வெட்டா விட்டால் ஆபத்து.
அதை வெட்டாவிட்டால் நல்லது;
வெட்டினால் ஆபத்து.
– அவை என்ன?

– எம்.எஸ். உம்மு அம்மாரா,
பதினோராம் வகுப்பு,
இமாம்கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை.

1. ஓயாமல் சுற்றுகிறான்;
ஓய்வூதியம் வாங்க மாட்டான்
– அவன் யார்?
2. ஒரு நாள் மட்டும் ஓடும் படம்,
ஒருவர் மட்டும் பார்க்கும் படம்
– அது என்ன படம்?
3. கறுப்புப் பெண் குளித்தால்
வெள்ளையாக மாறுவாள்
– அவள் யார்?

– சே. பாக்கியராஜ், கரியாப்பட்டினம்.

1. ஒரு சாண் குச்சிக்குள்ளே
ஒளிந்திருக்கிறான் கறுப்பு மனிதன் –
அவன் யார்?
2. ஓடையிலே மீன் பிடிக்கும்
ஒற்றைக்கால் நாராயணன் – அவன்
யார்?
3. குள்ளனின் வயிற்றுக்குள்
முத்துக்கள் – அது என்ன?
4. கூடவே வருவான் – ஆனால்
ஒரு உதவியும் செய்யமாட்டான் –
அவன் யார்?


– ஆர்.வி. மயில்வாகனன்,
டான்பாஸ்கோ பள்ளி, மதுரை.


1. சிவப்புப் பையில்
சில்லறைக் காசுகள் – அது என்ன?
2. உச்சியில் முளைத்த
இலை இல்லாத கிளையுள்ள மரம்
– அது என்ன மரம்?
3. மண்ணுக்குள்ளே வெள்ளிக்கட்டி
– அது என்ன?


– சி. முருகேசன், பத்தாம் வகுப்பு,
மயிலாடுதுறை.

விடை :
1. தேசியக் கொடி, 2. மயில், 3. பாம்பு.
1. பேனா, 2. தலைமுடி, 3. நகம், மரம்.
1. கடிகாரம், 2. கனவு, 3. உளுந்து.
1. பென்சில், 2. கொக்கு, 3. நிலக்கடலை, 4. நிழல்.
1. காய்ந்த மிளகாய், 2. மான் கொம்பு, 3. முள்ளங்கி.

பல்டி அடிக்கும் 'காப்ஸ்யூல்'








1. உபயோகப்படுத்தாத காப்ஸ்யூல் மாத்திரை ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்.


2. அதிலிருந்த மருந்தை கீழே கொட்டி விடவும்.

3. ஒரு 'பால்பேரிங்'குண்டை எடுத்து அந்த காப்ஸ்யூலுக்குள் போட்டு மூடிவிடுங்கள்.

4. இப்போது காப்ஸ்யூலை எடுத்து உருட்டி விடுங்கள். காப்ஸ்யூல் அழகாக பல்டி அடித்துச் செல்லும்.

என்ன சத்தம்?






1. ஒரே அளவுள்ள இரு தடிமனான அட்டைகளை எடுத்துக் கொள்ளுங்கள்.


2. அட்டையின் இருபுறமும் V வடிவில் கத்தரிக்கவும்.


3. ஒரு ரப்பர்பேண்ட்டை எடுத்து இரு அட்டைகளின் மேலும் V பகுதியில் பொருந்துமாறு மாட்டவும்.

4. இரு அட்டைகளையும் பிரித்து பின்புறமாகத் திருப்பவும்.

5. இப்போது கையை எடுத்து விடுங்கள். 'படார்' என்ற ஒலி காதைப் பிளக்கும். காசு செலவின்றி, சுற்றுச் சூழல் மாசு படாத வெடிச் சத்தம்!







ஹேமாவதி, புதுவை

ஒரு மரத்தின் மகிழ்ச்சி!



முன்பு, அங்கு ஒரு மரம் இருந்தது. ஒரு குட்டிப் பையன் தினமும் மரத்தின் அடியில் கிடக்கும் இலைகளை எடுத்து கிரீடம் செய்து கொள்வான். அந்தக் கிரீடத்தைத் தலையில் சூடி நான் இந்தக் காட்டின் ராஜா எனக் கூறி சந்தோஷப்பட்டுக் கொள்வான்.

அந்த மரத்தின் மீது ஏறி குதிப்பான், அதன் கிளையில் தொங்கி ஊஞ்சலாடுவான். பின் கொஞ்சம் பழத்தையும் சாப்பிடுவான். அந்த மரத்துடன் கண்ணாமூச்சி விளையாடி, விளையாடி களைப்பான பின், மரத்தின் நிழலில் படுத்துத் தூங்குவான். அவன் அந்த மரத்தை நேசிக்க ஆரம்பித்தான். மரம் மிக மகிழ்ச்சியடைந்தது. மரமும் அவனை நேசித்தது. காலம் ஓடியது.

குட்டிப் பையன் கொஞ்சம் வளர்ந்து விட்டான். அவன் இல்லாமல் மரம் தனிமையில் வாடியது. ஒரு நாள் அவன், அந்த மரத்திற்கு அருகில் வந்தான். மரம், "வா என் அருமை குட்டிப் பையனே, என் கிளையின் மேல் ஏறி ஊஞ்சலாடு. என் பழங்களை உண்டு என் நிழலில் விளையாடு" என்றது.

"நான் பெரியவனாகி விட்டேன். இனிமேல் உன் மீது ஏறி விளையாட மாட்டேன்" என்றான் அவன். மேலும் மரத்திடம், "நான் சில பொருட்களை வாங்கி மகிழ்ச்சியடைய விரும்புகிறேன், அதற்குக் கொஞ்சம் பணம் வேண்டும்" என்றான் பையன்.

"என்னிடம் பணம் ஒன்றும் இல்லை. ஆனால் இலைகளும், கனிகளும் உண்டு. என் பழங்களை எடுத்து நகரத்தில் சென்று விற்று பணத்தைப் பெற்றுக் கொள். நீ சந்தோஷமாக இரு" என்றது மரம்.

அவன் அந்த மரத்தின் மீது ஏறி





பழங்களை எடுத்தான். அதைப் பார்த்து மரம் மகிழ்ச்சியடைந்தது. பழத்தை எடுத்துச் சென்ற பின் அவன் மரத்திடம் வரவில்லை. மரம் சோகமடைந்தது.

ஒரு நாள் பையன் மீண்டும் வந்தான். மரம் மகிழ்ச்சியில் குலுங்கியது. "வா, என் மீது ஏறி என் கிளைகளில் ஊஞ்சலாடி சந்தோஷமாக இரு" என்றது. "இல்லை, நடுங்கும் குளிரில் இருந்து என்னைக் காக்க எனக்கு வீடு வேண்டும். என்னுடன் மனைவியும் குழந்தைகளும் உள்ளனர். அதனால் எனக்கு ஒரு வசதியான வீடு தேவை. எனக்கு ஒரு வீடு தரமுடியுமா?" என்றான்.

"என்னிடம் வீடு எதுவும் இல்லை, ஆனால், நீ என்னுடைய கிளைகளை வெட்டி எடுத்து வீடு கட்டிக் கொண்டு சந்தோஷமாக இரு" என்றது மரம்.

அவன் அந்த மரத்தின் கிளைகளை வெட்டிக் கையில் எடுத்துக் கொண்டான். மரம் மகிழ்ச்சியடைந்தது.


அதன் பின் அவன் மரத்திற்கு அருகில் வரவில்லை.

கொஞ்ச காலத்திற்குப் பின் அவன் மரத்திற்கு அருகில் மீண்டும் வந்தான். மரம் மிக மகிழ்ச்சியடைந்தது.


இப்பொழுது மரம் மெதுவாகப் பேசியது. "வா, வந்து என் மீது ஏறி விளையாடு" என்றது. எனக்கு வயதாகி விட்டது என்னால் விளையாட முடியாது" என்றான் அவன்.

"இக்கரையிலிருந்து, அக்கரைக்குச் செல்ல எனக்கு ஒரு படகு வேண்டும். படகு தருவாயா?" என்றான்.

"என் அடி மரத்தை வெட்டி நீ ஒரு படகு தயாரித்துக் கொள். அந்தப் படகை









இக்கரையிலிருந்து செலுத்தி அக்கரைக்குச் செல்" என்றது மரம். அவன் அடி மரத்தை வெட்டி ஒரு படகு தயாரித்து, ஓடையில் ஓட்டிக் கொண்டு போனான். மரம் இப்பொழுதும் சந்தோஷமடைந்தது. அதற்குப்பின் அவன் மரத்திடம் வரவேயில்லை. மரம் சோகமானது. மீண்டும் ஒரு நாள் அவன் மரத்திடம் வந்தான். மரம் அவனிடம் சொன்னது. "என் அருமை பையனே, என்னை மன்னித்து விடு. உனக்குத் தர என்னிடத்தில் ஒன்றும் இல்லை. என் கனிகள் போய் விட்டன."

"நீ கனி கொடுத்தாலும் என்னால் சாப்பிட முடியாது. என் பற்கள் போய்விட்டன" என்றான்.

"என் கிளைகள் போய் விட்டன, அதனால் நீ ஊஞ்சலாட முடியாது" என்றது மரம்.

"நான் ரொம்ப வயதானவனாகி விட்டேன். என்னால் ஊஞ்சலாட முடியாது" என்றான்.

"என் அடி மரமும் போய்விட்டது. அதனால் நீ என் மீது ஏற முடியாது" என்றது மரம்.

"நான் களைத்துப் போய் உள்ளேன் என்னால் ஏறவும் முடியது" என்றான் அவன்.

"நான் உனக்கு, என்னால் இயன்றதைக் கொடுக்க விரும்புகிறேன். ஆனால் என்னிடம் எதுவுமே இல்லை. நான் இப்பொழுது ஒரு வயதான மரக்கட்டை" என்றது மரம்.

"மன்னிக்கவும். எனக்கு இன்னும் அதிகமாக எதுவும் தேவையில்லை" என்றான்.

"அமைதியான இடத்தில் அமர்ந்து ஓய்வு கொள்ள நினைக்கிறேன். நான் ரொம்ப களைப்படைந்துள்ளேன்" என்றான் அவன்.

தளர்ந்து இருந்த மரம் தன்னைக் கொஞ்சம் நிமிர்த்திக் கொண்டது.



"நல்லது, மரக்கட்டையில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொள். வா என் அன்புக் குழந்தையே, வந்து உட்கார்ந்து ஓய்வு எடுத்துக் கொள்" என்றது மரம்.


அவன் மரம் சொன்னதைக் கேட்டு அதன் மீது அமர்ந்தான். மரம் மிக்க மகிழ்ச்சியடைந்தது.

மூலம் : **ஷெல் ஸில்வர்ஸ்டைன்**

தமிழில்
பா. ஸ்ரீகுமார்



கீழிருந்து மேல் செல்லும் இரட்டைக் கூம்பு!



பொதுவாகப் பொருட்கள் அனைத்தும் மேலிருந்து கீழ் நோக்கி உருளக் கூடியவை. ஆனால் நாம் செய்யப் போகிற இரட்டைக் கூம்பு கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும். வியப்பாக இருக்கிறதா? நீங்களே செய்து பார்த்து விடுங்களேன்!

தேவையான பொருட்கள் :

1. 2 பிளாஸ்டிக் புனல்கள்
2. சைக்கிள் வால்வ் டியூப் அல்லது ரப்பர் கயிறு
3. தடிமனான இரு அட்டைகள்
4. பென்சில்


செய்முறை :


முதலில் இரண்டு புனல்களையும் சைக்கிள் வால்வ் டியூப் அல்லது ரப்பர் கயிற்றால் கோர்க்கவும். ரப்பர் கயிற்றின் இருபுறமும் பெரிய முடிச்சைப் போட்டு விடுங்கள்.

பிறகு அட்டைகளை ஒரே மாதிரி சாய்வாக வெட்டுங்கள். அகலம் குறைந்த பகுதிகளை இணைத்துக் கட்டுங்கள்.

இப்போது உருளையான பென்சிலை அட்டையின் உயரம் அதிகமான பக்கத்தில் வைத்தால், பென்சில் கீழ்நோக்கி உருளும். பென்சிலை எடுத்து விட்டு இரட்டைக் கூம்பை உயரம் குறைவான பக்கத்தில் வைத்தால் கூம்பு உயரமான பகுதியை நோக்கிச் செல்லும்!

காரணம் என்ன? கீழ்ப்பகுதியில் வைக்கும் போது இரட்டைக் கூம்பின் புவிஈர்ப்பு மைய விசை அட்டைப் பாதையின் பரப்பிற்கு மேலே இருக்கும். இதனால் இரட்டைக் கூம்பில் இருந்த குறைந்த சக்தி, இயங்கு சக்தியாக மாறி விட்டது.






கற்பூரம் கிடைப்பது எப்படி?

உயரமான ரயில்வே ஸ்டேஷன்!

உலகிலேயே மிகவும் உயரமான இடத்துக்கு ரயில் வண்டி செல்கிறது. எங்கு தெரியுமா? தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில். கடல் மட்டத்துக்கு மேல் 4,800 மீட்டர் உயரத்தில் இந்த ரயில்வே ஸ்டேஷன் உள்ளது.




ஓட்டுரிமை

உலகில் மிகக் குறைந்த வயதில் ஓட்டுரிமை வழங்கும் நாடு பிலிப்பைன்ஸ் தான். அங்கே 15 வயது முடிந்து போனால் போதும், ஓட்டுரிமை உண்டு. இதற்கு நேர் எதிர் அங்கோலா நாடு. அங்கே ஓட்டுரிமை வழங்கும் வயது இருபத்தைந்து!

தவறான நம்பிக்கை!

நெருப்புக் கோழி பகைவர்களைக் கண்டால் தன் தலையை மணலில் புதைத்துக் கொள்கிறது என்று சிலர் கூறுகிறார்கள். இது கற்பனையான செய்தியாகும். ஏதாவது ஒலி(சத்தம்) ஏற்பட்டால் தன் தலையை தரையோடு தரையாகத் தாழ்த்தி கவனமாகக் கேட்கிறது. ஆபத்தை விளைவிக்கும் ஒலியாக இருந்தால் ஆபத்து நெருங்கி விட்டது என்பதை அறிந்து மற்ற விலங்குகளைப் போன்று இதுவும் ஓடி ஒளிகிறது.

– ஆர். ஆர். பூபதி



பெற்றார்.


வியப்பூட்டும் உண்மைகள் நூலிலிருந்து: நல்லாலம் காசிதாசன்.



மலேரியா என்றால்?

மலேரியாக் காய்ச்சல் என்கிறோம். 'மலேரியா' என்பது இத்தாலியச் சொல்லிலிருந்து பிறந்தது. மலா என்றால் சதுப்பு நிலம் என்றும் ஏரியா என்றால் கெட்ட காற்று என்றும் இத்தாலி மொழியில் பொருள். இந்தக் காற்றினால்தான் காய்ச்சல் வருவதாக இத்தாலியர்கள் நம்பியதே 'மலேரியா' என்று அக்காய்ச்சல் பெயர் பெற்றதற்குக் காரணம்.


– எம். சலிலா பானு



ஆர்வம்!

பிரபல விஞ்ஞானியான ராபர்ட் பாயில் ஒருமுறை உடல் நலமின்றி இருந்த போது தவறுதலாக விஷத் தன்மையுள்ள மருந்தை அவருக்குக் கொடுத்து விட்டார்கள். எப்படியோ உயிர் பிழைத்த அவருக்கு அதன் பிறகு தான் ரசாயனத்தைப் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. தமது கண்டுபிடிப்புகளால் நிலைத்த புகழ் பெற்றார்.

உலகின் சிறிய, பெரிய தபால் தலை





இதுவரை உலகில் வெளி வந்துள்ள தபால் தலைகளில் மிகவும் சிறியது பொலிவியா நாட்டில் வெளியிடப்பட்டதுதான். உலகின் மிகப் பெரிய தபால் தலையை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

(ஆதாரம்– தபால் தலையின் கதையும் சேகரிப்பவர்களுக்கான குறிப்புகளும் என்ற நூலிலிருந்து)
தகவல்: ச. ஸ்ரீராம்

நமது நாக்கில் 9 ஆயிரம் ருசியறியும் மொட்டுக்கள் உள்ளன. இவற்றுக்கு 13 ஆயிரம் உணர்ச்சி நரம்பு செல்கள் உதவுகின்றன.

பூச்சியினத்தில் மிக வேகமாகப்





பறக்கக் கூடியது 'ஹாக்மாத்' என்ற பெயருடைய பூச்சி. இது மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் பறக்கும்.

சந்தியூர் ஏ. கோவிந்தன்

கற்பூரம் எப்படி கிடைக்கிறது?




கற்பூரம் எப்படி கிடைக்கிறது தெரியுமா? கற்பூர மரம் என்ற மரத்தின் பட்டைகளையும், கிளைகளையும் துண்டுகளாக வெட்டி அவற்றின் இலைகளையும் சேர்த்து கொதிக்க வைக்கின்றனர்.

கொதிக்கும்போது வெளி வரும் ஆவியை வைக்கோல் போரால் மூடி அதன் மீது படிய வைக்கின்றனர். ஆவியானது வைக்கோல்களில் பூப்பூவாக படிகிறது. இதுவே கற்பூரமாகும். ஜப்பான், சீனா, பார்மோசா தீவுகளில் இக் கற்பூர மரங்கள் ஏராளமாக வளர்கின்றன.

இப்போது செயற்கை முறையிலும் கற்பூரம் உற்பத்தி செய்யப்பட்டாலும் இயற்கை கற்பூரமே நின்று எரியும். செயற்கை கற்பூரம் எளிதில் ஆவியாகி விடும்.

ஆதாரம்: அறிவியல் அறிவோம்
ஐ. முகமது ஹாரூன் பாஷா,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
வத்தலக்குண்டு.

பொத்தான்



முதன் முதலில் பொத்தான்களைப் பயன்படுத்தியவர்கள் எகிப்தியர்கள்தான். பொத்தான்களை உடைகளை இணைக்கப் பயன்படுத்தாமல் அலங்காரப் பொருள்களாக உடைகளின் மேல் வைத்துத் தைத்துக் கொண்டனர். அதன் பின்னரே ஐரோப்பியர்கள் பொத்தான்களைப் பயன்படுத்தி பிற நாடுகளுக்குப் பரப்பினர்.

ஆதாரம்: அதிசய அறிவுத் துணுக்குகள்
தகவல்: நெ. இராமன்

மருதாணி வைப்பதால் நம் கை சிவப்பது லாஸோன் நிறமியால்.

பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை தான் குறிஞ்சி மலர் பூக்கும்.

தாவரங்களிலே மிக வேகமாக வளர்ச்சி அடையும் தாவரம் மூங்கில்.

ஆதாரம்: 1000 அறிவியல் கேள்வி பதில்கள் – ஏ.எல். சாதிக்,
காரைக்கால்.



கோகுலம் க்விஸ் முடிவு

1. பூஜ்யத்தைக் கண்டறிந்தவர்கள் **இந்தியர்கள்.**

2. உலகில் இரண்டாவது பெரிய கடல் **அட்லாண்டிக்.**

3. சர்க்கரை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு **கியூபா.**

4. இந்திய சினிமாவின் தந்தை **தாதா சாஹிப் பால்கே.**

5. கிவி பறவை **நியூசிலாந்து** நாட்டில் காணப்படுகிறது.

6. கேரளாவின் இரட்டை நகரங்கள் **எர்ணாகுளம், கொச்சி.**

7. நைல் நதி **எகிப்து** நாட்டில் பாய்கிறது.

8. மிகப் பெரிய பாலைவனம் **சஹாரா.**

9. 1999ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடை பெற உள்ள நாடு **இங்கிலாந்து.**

10. 26 ஆண்டுகள் சிறையில் இருந்த தென் ஆப்பிரிக்கத் தலைவர் **நெல்சன் மண்டேலா.**

இப்போட்டியில் ஆர்வத்துடன் நிறைய பேர் கலந்து கொண்டனர். சரியான விடைகளை அளித்தவர்களில் இருபது பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. செ. ரவீந்திரன், ஏழாம் வகுப்பு, ஜவகர் நவோதயா வித்யாலயா, வாச்சிகுடி அஞ்சல், காரைக்கால்.

2. இரா. செண்பகப் பூங்குழலி, ஏழாம் வகுப்பு, செயிண்ட் பிரான்சிஸ் ஆங்கிலோ இந்தியப் பள்ளி, குனியமுத்தூர், கோவை.

3. கே. வெங்கடேசன், செக்காலை, காரைக்குடி.

4. செ. கார்த்திக் ராஜ், ஆர்.எஸ்.புரம், கோவை.

5. மனீஷா, வடக்கன்குளம், நெல்லை மாவட்டம்.

6. வி. அஜய் ராஜா, இராமநாதபுரம்.

7. ஜி. கார்த்திகா, குன்னூர்.

8. கோ. சோபன்பாபு, மச்சுவாடி, புதுக்கோட்டை.

9. க. சரண்யா, ஏழாம் வகுப்பு, தேனி.

10. த. பழனி, இராசா நகரம் கிழக்கு, திருவள்ளூர் மாவட்டம்.

11. இ. நெடுஞ்செழியன், எட்டாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, திருவள்ளூர் மாவட்டம்.

12. ச. வேங்கட சுப்பிரமணியன், திம்மராஜபுரம்.

13. என். கலாவதி, கருங்கல்பட்டி, சேலம்.

14. கே. இலக்கிய அரசு, எட்டாம் வகுப்பு, காரைக்கால்.

15. க. அட்சயா, புலியூர், கரூர் மாவட்டம்.

16. ப. தனசேகர், எண்டியூர், விழுப்புரம் மாவட்டம்.

17. ச. சௌமியா, காட்பாடி, வேலூர்.

18. க. வீராச்சாமி, பிராமணவயல், புதுக்கோட்டை.

19. காவ்யா, தி.நகர், சென்னை.


20. மு. நியாஸ் அகமது, ஆறாம் வகுப்பு, தஞ்சாவூர்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.





குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. கோவலனின் மனைவி (4)
3. புதுமை என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)
4. ஆறு, குளம், கடலுக்கு இது உண்டு (2)
9. ஜொலிக்கும் இந்தக் கல்லின் விலை அதிகம். குறிப்பிட்ட வெப்ப நிலையில் கரியாக மாறிவிடக் கூடியது (3)
10. மருத்துவகுணம் நிறைந்த இம்மரத்தை நினைத்தாலே கசப்புச் சுவைதான் நினைவிற்கு வரும் (3)
12. பயம் கொள்ளாமையை இப்படியும் அழைக்கலாம் (3)
13. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்பது இது (2)
15. ஷாஜஹான் இவருக்காக தாஜ்மஹால் கட்டினார் (4)

வலமிருந்து இடம்

5. பிரான்ஸின் தலைநகரம் (3)
7. ஏழு நாட்கள் கொண்டது இது (3)
8. ரீங்காரம் செய்யும் உயிரினம் (3)
16. நடனக்கலைகளில் ஒன்று (4)

மேலிருந்து கீழ்

1. விசேஷங்களுக்கு வைக்கப்படும் இனிப்பு. படிகம் போன்றது (5)
2. குழந்தைக்கு உணவூட்டும் பாத்திரம் (4)
3. இது சிறந்த நண்பன் (2)
6. தேருக்கு மற்றொரு பெயர் (3)
11. பருப்புகளில் இந்தச் சத்து உள்ளது (4)
14. முகமதியர்கள் மெக்கா, மெதினாவிற்கு இந்தப் பயணம் செய்வார்கள் (2)

கீழிருந்து மேல்

5. ஆற்றைக் கடக்க உதவும் (3)
15. சிப்பியில் இருந்து கிடைக்கும் மதிப்பு மிக்க பொருள் (3)
16. தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்கு இது அவசியம் (5)


— **க. ரெனிதா, கு.ப்ரியா,**
ஒன்பதாம் வகுப்பு, அரசினர்
மகளிர் மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி,
தேனி மாவட்டம்

விடை 65 ஆம் பக்கம்

6 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி படம்: லலிதா




ஐயோ! இந்தப் பாம்புகள் இரவில் உணவு.. தேடி வெளி வருமே! நான் எங்கே தங்குவேன்?
சிந்துபாத் பாதுகாப்பான இடத்தைத் தேடினான்.
அதோ ஒரு குகை. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நல்ல இடம்!
அருகில் இருந்த பாறையை உருட்டி குகை வாயிலை அடைத்தான்.
உயிர் போகுது. காலையில் மீண்டும் இதை நகர்த்தணும்... ம்...ம்...
எப்படியோ பாம்புகளிடமிருந்து . தப்பினால் சரி.


வேறு வழியில்லை. இருட்டில் படுத்துறங்க வேண்டியதுதான்...
சிந்துபாத்திற்குத் தூக்கம் வரவில்லை.
வசதியான வாழ்க்கையை அனுபவிக்காமல் இப்படி மாட்டிக் கொண்டு ... ம்... மறுபடியும் நாடு திரும்புவேனா?
மறுநாள் காலை —.
விடிந்து விட்டதா? பசி உயிர் போகிறதே! முதலில் ஏதாவது சாப்பிட்டு பிறகு தப்பிக்க வழி தேடணும்.



உணவு தேடிக் கிளம்பினான்.
சாப்பிடற மாதிரி ஒண்ணும் கிடைக்கலையே!
களைப்புடன் மரத்தடியில் அமர்ந்தான்.
விதை மட்டும் கீழே கிடக்கு. மரத்தில் பழங்களைக் காணோம்.
விதையில் இருந்த பருப்பால் பசி அடங்கி விட்டது. இனி...

(தொடரும்)



தோழர் வாழ்க!

எழுதி எழுதித் தள்ளுவார்
எண்ணம் பொங்கும்
போதிலே,
எழுதும்போது இடையிலே
எடுத்து ஏதோ உண்ணுவார்.

எழுதி முடித்த காகிதம்
எண்ணி வைத்த வேளையில்
எழுந்ததொரு ஐயமே
என்ன அது தெரியுமா?

பஞ்சம் விஞ்சும் நாளிதில்
பகிர்ந்து உண்ணப்
பணித்த பின்
பங்கினுக்கு அதிகமாய்
பக்கத்திலே வைத்ததேன்?

"நாட்டு மக்கள் பெறுவதே
நானும் பெறுதல் நீதியாம்;
நாட்டின் தலைவனென்பதால்
நான் அதிகம் பெறுவதா?"

என்று சொல்லி மிகுதியை
ஏழைச் சிறுவர்க் கனுப்பினார்
நன்று நீதி செய்தவர்
நம் தோழர் லெனின்
வாழ்கவே!

— ஆர்.பி. சாரதி

ஓவியப் போட்டி

இந்த மாதத் தலைப்பு – **காய்கறிகள்.** தலைப்பிற்கு ஏற்ற ஓவியங்களை வண்ணம் தீட்டி அனுப்பி வைக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.


ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள்.

கடைசி தேதி **20.5.99**





எங்கள் ஊரில் நடந்தது!



துணிக்கடையில்...

என் மாமா தமிழாசிரியராக இருக்கிறார். ஒருநாள் நானும் மாமாவும் துணிக் கடைக்குச் சென்றோம். கடைக்காரரிடம் "உள்ளங்கி வேண்டும்" என்றார் மாமா. கடைக்காரர் எங்களை விநோதமாகப் பார்த்துவிட்டு "சார்! படிச்சவங்களா தெரியறிங்க. இது துணிக்கடை. எதிரில் உள்ள காய்கறி கடையில் கேட்டால் முள்ளங்கி கிடைக்கும்'' என்றார். மாமா திகைத்தார். உடனே நான் "சார்! மாமா கேட்டது முள்ளங்கி இல்லை, உள்ளங்கி. அதாவது பனியன் என்றேன். கடைக்காரர் மன்னிப்புக் கேட்டு விட்டு "சார்! புரிகிறமாதிரி பேசினீங்கன்னா பிரச்னை இல்லையே!'' என்றார்.

– அன்னை பாக்கியராஜ்,
திருவிடைமருதூர்.



கண்ணாடி போட்டவர்!

நான் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன். என் பக்கத்து சீட்டுக்காரரிடம் நடத்துனர் ''டிக்கெட் வாங்கலையா?'' என்று கேட்டார். ''சார்! பின்னால கண்ணாடி போட்டவர் எனக்கு டிக்கெட் எடுத்திட்டார். அவரிடம் கேளுங்க'' என்றார். நடத்துனர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''எல்லோரும் முன்னாலேதான் கண்ணாடி போட்டிருக்காங்க. பின்னாலே யாரும் கண்ணாடி போடலையே'' என்றார் சிரித்தபடி. இதைக்கேட்ட அனைவரும் சத்தம் போட்டுச் சிரித்தனர்.

- அ.ஹாஜாநஜீமுதீன்,
மதுக்கூர்.

திரும்பி வந்தது!

என் தோழி வெளியூரில் படிக்கிறாள். நானும் அவளும் அடிக்கடி கடிதம் எழுதிக் கொள்வோம். ஒருமுறை நான் எழுதிய கடிதத்திற்கு நீண்ட நாட்களாக பதிலே வரவில்லை. அவளுக்குக் கோபமாக ஒரு கடிதம் எழுதிப்போட்டேன். மறுவாரம் பொங்கல் விடுமுறையில் ஊருக்கு வந்தாள். என்



காய்கறி கடையில் முள்ளங்கி கிடைக்கும்!



கரும்பு

வீட்டில் கரும்பு வாங்கி வைத்திருந்தார்கள். என் தம்பி தாத்தாவிடம் சென்று "தாத்தா! கரும்பு வேணுமா?" என்று கேட்டான். உடனே ''கரும்பு தின்னக் கூலியா வேணும்? கொடு கரும்பை'' என்றார் தாத்தா. ''தாத்தா கரும்பு தின்னக் கூலி வேண்டாம். பல் வேணும் இல்லையா?'' என்று கேட்டேன் நான். உடனே தாத்தா சிரிக்க ஆரம்பித்து விட்டார்!

– மு. கந்தவேல்,
தாரமங்கலம்.

னைப் பார்த்து ''இங்கே பார் உம்மு! நான் உனக்கு எழுதிய கடிதம் எனக்கே திரும்பி வந்து விட்டது. பெறுநர் முகவரியைப் பார்த்தால் மறந்து போய் என் முகவரியையே எழுதியிருக்கேன்!'' என்று அவள் சொல்லி முடிக்க எனக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

– எம்.எஸ். உம்மு அம்மாரா,
பதினோராம்வகுப்பு,
இமாம் கஸ்ஸாலி
மெட்ரிக் பள்ளி,
வால்பேட்டை.

பைசா இல்லை!

என் மாமாவிடம் பண உதவி பெறுவதற்கு அவரது நண்பர் வந்திருந்தார். மாமாவும் கஷ்டத்தில் இருந்தார். அவரிடம் மாமா ''எனக்கும் நேரம் சரியில்லை. கையில் பத்து பைசா கூட இல்லை'' என்றார். உடனே என் மாமாவின் குட்டிப் பையன் ''பொய் சொல்லாதீங்கப்பா. உங்க பாக்கெட்ல பத்து பைசா நிறைய இருக்கு'' என்றானே பார்க்கலாம்!

– கோ. முத்துகுமார்,
பத்தாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப்பள்ளி,
பெரியதச்சூர்



ஐஸ் இருக்கா?

எதிர்வீட்டுப் பெண் ஐஸ்வர்யா எங்கள் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது அவளின் அம்மா என்னிடம் வந்து ''ஐஸ் இருக்கா?'' என்று கேட்டார். ''இப்பதான் ஃப்ரிட்ஜ்ல தண்ணீர் ஊற்றி வச்சேன். அதனால இன்னும் ஐஸ்ஸாக மாறலை'' என்றேன் நான். ''குகன், கடிக்காதே! என் பெண் ஐஸ்வர்யா வைத்தான் கேட்டேன்'' என்றார். நான் மன்னிப்புக் கேட்டேன்.

– நா.பா. குகன், ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
பெரியதச்சூர்.



துள்ளிக் குதிக்கும் அழகு முயல்கள்!

முயல் என்றதுமே 'முயலை ஆமைவென்ற கதை'யும் 'சிங்கத்தை முயல் ஏமாற்றிய கதை' யும் தான் நினைவிற்கு வரும். முதல் கதையில் முயலின் அகந்தையும், இரண்டாவது கதையில் அதன் தந்திரமும் வெளிப்படும் விதமாக கதைகள் அமைந்துள்ளன.

உண்மையில் முயல்கள் சாதுவானவை. நீண்ட காதுகள், பெரிய கண்கள்,





மென்மையான முடிகளுடன் கூடிய உடலைக் கொண்ட அழகான சிறிய பிராணியே இந்த முயல்கள்.

முயல்களில் இருவகை உண்டு. ஒன்று குழி முயல், மற்றது காட்டு முயல்.

குழிமுயல்கள் பெயருக்கேற்றவாறு நிலத்தில் குழி தோண்டி வசிக்கக் கூடியவை. பல முயல்கள் ஒன்று சேர்ந்து குழிகளில் வசிக்கின்றன.

இவற்றின் காதுகளும் கண்களும்

பெரியவை. கண்களைச் சுழற்றி எல்லா திசைகளையும் பார்க்கும். அதிர்வுகளை எளிதில் உணரக்கூடிய மீசை மற்றும் கூர்மையான காதுகளின் உதவியால் ஒலியை அறிந்து அதற்கேற்றவாறு நடந்து கொள்கின்றன.

அண்டார்டிகா மற்றும் ஐரோப்பாவின் குளிர் மிகுந்த பிரதேசங்களைத் தவிர்த்து உலகெங்கும் காணப்படுகின்றன.

சமவெளிப்பகுதிகளில் வாழும் குழி முயல்கள் மென்மையான மணல் நிறைந்த பகுதிகளையே குழி தோண்ட தேர்ந்தெடுக்கின்றன. அப்போது தான் சுலபமாகக் குழியைத் தோண்ட முடியும்!

பத்து பெரிய முயல்கள் மற்றும் குட்டி முயல்களுடன் ஒரு காலனியில் வசிக்கின்றன. ஒவ்வொரு முயலுக்கும் குழியில் ஒரு அறை இருக்கும். குழிக்குள்ளேயே பக்கத்து முயல்களைச் சந்திக்க சுரங்கம் போன்று வழியிருக்கும்.

குழி முயல்களுக்கு எதிரிகள் நிறைய இருப்பதால் தங்கள் இருப்பிடத்திற்கு அருகிலேயே உணவு தேடிச் செல்கின்றன. உணவு தேடும் போது ஏதாவது ஆபத்தை உணர்ந்து விட்டால் ஒரு முயல் பின்னங்கால்கள் மற்றும் வாலால்





சுஜாதா

சத்தத்தை எழுப்பி மற்ற முயல்களுக்கு எச்சரிக்கை செய்து விடும்.

புல், கிரைகள், காய்கறிகள் போன்றவற்றை உணவாக உட்கொள்கின்றன. சாப்பிடும் உணவுகளில் தண்ணீர் சத்து அதிகம் இருந்தால் தனியாக நீரைப் பருகாது. நீர் அதிகம் பருகினால் இவை நோய்க்கு ஆளாக நேரிடும்.

பெண் முயல் ஆண்டிற்கு 6 முதல் 7 தடவை குட்டி போடும். ஒரு தடவைக்கு 7 முதல் 8 குட்டிகள் வரை தாய் ஈன்றெடுக்கும். பெண் முயல் மென்மையான புல்லை மேடைபோல் அமைத்து அதிலேயே குட்டி போடும். குட்டிகள் பிறந்து சில வாரங்கள் வரை தாயிடமே பால் குடித்து வளர்கின்றன. பெண் முயல் இரை தேடி வெளியே செல்லும்போது குழியைப் புற்களால் மறைத்து வைத்து விட்டுச் செல்லும்.

மூன்று வாரங்கள் வரை குட்டிகளை அடிக்கடி பார்த்து உணவளித்து, சுத்தப்படுத்தி நன்றாகக் கவனித்துக் கொள்ளும் தாய் முயல்.

குழிமுயல்கள் அதிகாலையிலும், மாலையிலும் உணவு தேடி வெளியே கிளம்புகின்றன.

காட்டு முயல்கள் குழிமுயல்களை விட உருவத்தில் பெரியவை. குழிமுயல்களை விட கேட்கும் சக்தியும் அதிகம். மிக வேகமாக ஓடக் கூடியவை.

இவை தனியாக வாழக் கூடிய இயல்புடையவை. சமவெளிப் பகுதிகள், மலைப் பிரதேசங்களில் வாழ்கின்றன.

தானியங்கள், புல், காய்கறிகள், மரப்பட்டைகளே உணவு.


வேட்டை நாய்கள், நரி போன்ற விலங்குகளால் இவற்றிற்கு ஆபத்து அதிகம். தப்புவதற்கு உறுதியான பின்னங்கால்களினால் 70கி.மீ. வேகத்தில் இவைகளால் ஓட முடிகிறது. பெண் முயலுடன் குடும்பம் நடத்த ஆண் முயல்கள் சண்டை போடுகின்றன. ஜெயித்த ஆண் முயல்



பெண் முயலுடன் சேரும்.

ஒரு பெண் முயல் ஆண்டிற்கு 4 முதல் 5 தடவை குட்டிகளைப் போடும். ஒரு தடவைக்கு 3 முதல் 4 குட்டிகளை ஈன்றெடுக்கும்.

காட்டு முயல் குட்டிகள் மூன்றே நாட்களில் தனித்து செயல்படத் துவங்கி விடுகின்றன. தனித்தனியே இருப்பிடத்தையும் அமைத்துக் கொள்கின்றன. இருந்தாலும் இரவு நேரங்



களில் தாய் குட்டிகளைப் போய் பார்த்துக் கண்காணித்துக் கொள்ளும்.

காட்டு முயல் குட்டிகளின் உடலில் வெள்ளை நிறத் திட்டுகள் காணப்படும். முதிர்ச்சியடைந்த பின் வெண்மை நிறம் மாறிவிடும்.

காட்டு முயல்கள் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அதிகம் வாழ்கின்றன.

அறிவியல் உண்மைகள்

● முயல்கள் கொறிக்கும் பாலூட்டி வகையைச் சார்ந்தவை. மேல் உதடு பிளவு பட்டிருக்கும்.

● கூர்மையான பற்கள் தேயத் தேய வளர்ந்து கொண்டே இருக்கும். இதனால் கடினமான பொருட்களையும் கொறித்து உண்ணும்.

● குழிமுயல்கள் பொதுவாக வெண்மை நிறத்தில் காணப்படும். சாம்பல் மற்றும் பழுப்பு நிறங்களிலும் இருக்கும். காட்டு முயல்கள் பிரௌன் மற்றும் கறுப்பு நிறங்களில் காணப்படுகின்றன.

● குழிமுயல்கள் செல்லப் பிராணியாக வீட்டில் வளர்க்கப்படுகின்றன. வீடுகளில் வளர்க்க நீளமான கூண்டு அவசியம். முயல்களைத் தூக்கும் போது காதுகளின் அடிப்பகுதியில் ஒரு கையால் பிடித்தும் உடலின் அடியில் ஒரு கையை வைத்தும் தூக்க வேண்டும்.

● முயல்களுக்கு வைட்டமின்-பி சத்தும் அமினோ அமிலங்களும் தேவைப்படுகின்றன. முயல்களின் புழுக்கைகளில் இச்சத்திருப்பதால் அதையே உண்டுவிடுகின்றன.

● முயல்கள் விவசாயிகளுக்கு அதிகத் தொல்லைகளைத் தருகின்றன. வயல்களில் வளர்ந்து வரும் பயிர்களை முளையிலேயே தின்று அழித்து விடுகின்றன.

● குழிமுயல்களின் குட்டி பிறந்தவுடன் கண்களைத் திறப்பதில்லை. முடிகளற்றுக் காணப்படும். ஆனால் காட்டு முயல்கள் பிறந்த உடனே கண்களைத் திறந்து விடுகின்றன. உடலில் முடிகளோடும் காட்சியளிக்கின்றன.


● குழிமுயலின் முடியால் தொப்பிகள், உடைகள் செய்யப்படுகின்றன.

● குழிமுயலைப் பழக்கி வீடுகளில் வளர்க்கலாம். காட்டு முயல் பழகாது.



முதல் பரிசு

பி.செந்தில்நாதன்,
கீழ்வேளூர்,
நாகை மாவட்டம்



மூன்றாம் பரிசு

எஸ். ரவீந்திரன்,
ஏழாம் வகுப்பு,
ஜவகர் நவோதயா வித்யாலயா பள்ளி,
ராயன்பாளையம், காரைக்கால்

ஓவியப் போட்டி முடிவுகள்




இரண்டாம் பரிசு

எம்.எஸ். உம்மு அம்மாரா,
பதினோராம் வகுப்பு,
இமாம் கஸ்ஸாலிமெட்ரிக்
பள்ளி, லால்பேட்டை,
கடலூர் மாவட்டம்

ஆறுதல் பரிசு

எஸ். பொன்மணி ப்ரியதர்சினி,
ஐந்தாம் வகுப்பு,
ஆண்டாங் கோவில், கரூர்






ஆறுதல் பரிசு

என். கௌரி,
மணலி,
சென்னை

'வீடு' என்ற தலைப்பில் ஓவியப்போட்டி
அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



கோகுலம் க்விஸ்

1. தாஜ்மஹால் ———— ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.
2. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு ————.
3. பாலைத் தயிராக மாற்றுவது ————.
4. ஈக்கு ———— இறகுகள்.
5. பூகம்பத்தைக் கண்டறிய உதவும் கருவி ————.
6. நேபாளின் தலைநகரம் ————.
7. இந்தியாவின் மிக உயர்ந்த மலைச் சிகரம் ————.
8. சர் ஹம்ரி டேவி கண்டுபிடித்த வாயு ————.
9. சமீபத்தில் 'ஹாட்ரிக்' சாதனை படைத்த கிரிக்கெட் வீரர் ————.
10. சந்திரனில் முதலில் காலடி எடுத்து வைத்தவர் ————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்து கேள்விகளுக்கும் சரியான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புவதோடு உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி 31.5.99.

ஆசிரியர்
கோகுலம்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

காற்றுத் தூக்கி!







பஸ், கார்களின் டயர் பஞ்சராகி விட்டால் வண்டியின் கீழே 'ஜாக்' என்று அழைக்கப்படும் காற்றுத் தூக்கியை வைத்து உயர்த்துவார்கள். இந்தப் பை பெரிய ரப்பரால் ஆனது. இதில் உள்ள குழாயை வண்டியின் 'எக்ஜாஸ்ட்'டில் பொருத்தி, இஞ்சினைக் கிளப்புவார்கள். இஞ்சினிலிருந்து புகை ரப்பர் பையில் நிரம்பி, பலூன் போல மாறிவிடும். இப்போது வண்டியை உயர்த்தி செப்பனி

டுவார்கள். இன்று இதைவிட நவீன சாதனங்கள் வந்து விட்டன.

ஒரு லிட்டர் பால் கவரை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு பிளாஸ்டிக் குழாய் அல்லது பழைய பால் பேனாவின் வாயை பையில் இணைத்துக் கயிற்றால் நன்கு கட்டி விட வேண்டும்.



பால் பையின் மீது கனத்த புத்தகங்கள் நான்கை அடுக்குங்கள். பிறகு பிளாஸ்டிக் குழாயில் வாயால் ஊதிக் காற்றை நிரப்புங்கள். சற்று நேரத்தில் பையுடன் கூடவே புத்தகங்களும் மேலே எழும்பும்.

என்ன காரணம்?

பையில் காற்றின் அழுத்தம் குறைவாக இருந்தாலும் அதன் பரப்பு அதிகமாக இருப்பதால், மேல்நோக்கி செலுத்தப்படும் முழு சக்தி அதிகமாக உள்ளது. இதனால் புத்தகங்கள் மேலே எழும்புகின்றன.



திராவிட் திறமையானவர்!



திராவிட்டின் முழுப்பெயர் ராகுல் சரத் திராவிட். 11.01.1973 அன்று இந்தூரில் பிறந்தவர். கர்நாடக அணிக்காக விளையாடத் தொடங்கி, இந்திய அணியில் இடம் பிடித்தவர். சென்னையில் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிபவர். வலது கை பேட்ஸ்மேன்; ஆஃப் பிரேக் பௌலர்.

- 1990 - 91 ரஞ்சிக் கோப்பை போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டார். 1994 இல் ஷார்ஜாவில் நடந்த ஒரு நாள் சர்வதேசப் போட்டியின் மூலம் UAE உடனான போட்டியில் சர்வதேச கிரிக்கெட்டில் நுழைந்தார். 1996 இல் உலகக் கோப்பை கிரிக்கெட்டிற்குப் பின் இங்கிலாந்து பயணம் மேற்கொண்டபோது தன் முதல் டெஸ்ட் சதத்தை அடித்தார்.


- இதுவரை 4 ரஞ்சிக் கோப்பை உட்பட 5 போட்டிகளுக்குக் கேப்டனாகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

- 'டெஸ்ட் ஆட்டத்திற்கு மட்டுமே திராவிட் ஏற்றவர்' என்று கருதப்பட்டு, சிறிது காலம் ஒருநாள் ஆட்டங்களில் சேர்க்கப்படாமலிருந்தார். ஆனால் நியூசிலாந்து பயணத்தின் போது திராவிட் அடித்த ரன்கள், அவரை மீண்டும் ஒருநாள் போட்டிக்குக் கொண்டு வந்திருக்கின்றன. பெப்சி ஒரு நாள் போட்டித் தொடரில் இலங்கைக்கு எதிராகக் குறைந்த பந்துகளில் அவர் எடுத்த சதம் அனைவராலும் பாராட்டப் பெற்றது. திராவிட் 'ஒன் டவுன்' என்ற நிலையில் களமிறங்குவார்; நீண்ட நேரம் அடுத்த விக்கெட் விழாத வகையில் பொறுப்பாக ஆடுவார்; அவரால் நிறைய 'பார்ட்னர் ஷிப்' ரன்கள் சேர்க்க முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

- மார்ச் '99 இல் பெப்சி ஒரு நாள் போட்டித் தொடரின் போது, பந்து வீசிய திராவிட்டிற்கு முதல் விக்கெட் கிடைத்தது. இனிமேல் பந்து வீச்சிலும் திராவிட் பிரகாசிப்பாரா? பார்க்கலாம்!

— விளையாட்டுப் பையன்

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's College and Career Fund

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's College and Career Fund

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME...

STANDARD...

SUBJECT...

SCHOOL...

UNIT TRUST OF INDIA Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME...


STANDARD...

SUBJECT...

SCHOOL...

UNIT TRUST OF INDIA Raj Lakshmi

கோகுலம்



NAME...


STANDARD...

SUBJECT...

SCHOOL...

UNIT TRUST OF INDIA Raj Lakshmi

கோகுலம்




NAME...


STANDARD...

SUBJECT...


SCHOOL...

UNIT TRUST OF INDIA Raj Lakshmi


கதை : நா. வேதா
படம் : சசி
காகமும் பச்சைக் கிளியும் பக்கத்து, பக்கத்து மரங்களில் வசித்து வந்தன. ஒரு நாள் –
சோனு! இன்னிக்கு மட்டும் வேறு எங்காவது தங்கிக்கிறியா?
எதுக்கு?
என் உறவினர்கள் வருகிறார்கள்.
உன் வீட்டிற்குதானே வருகிறார்கள். நான் பக்கத்து மரத்தில்தானே இருக்கேன்.
அங்குதான் பிரச்னை.
என்ன? புரிகிற மாதிரி சொல்லு.
இவ்வளவு அழகான நான் உன் வீட்டிற்கு அருகில் இருந்தால் இழிவாக நினைப்பார்கள்.
என்னால் போக முடியாது மானு.
எனக்கே இவ்வளவு கறுப்பான உன்னைப் பார்க்கப் பிடிக்கலை. இடத்தை காலி செய்.
பார்க்கப் பிடிக்கலைன்னா கண்ணை மூடிக்க. நான்தான் உனக்கு இடம் கொடுத்தேன். நினைவிருக்கா?



மறுநாள் –
வாங்க, வாங்க!
அந்தக் காக்கைக்குப் பக்கத்திலே குடியிருக்கியே, உனக்கே நல்லா இருக்கா?
என்ன பண்றது?
அழகா இருந்தால் மட்டும் போதாது. நாவடக்கமும் வேணும்.
திமிரைப் பார்.
உங்களுக்குத்தான்!
நாட்கள் சென்றன. ஒரு நாள் –
ஏய் கறுப்பி சோனு. எங்கே கிளம்பிட்டே?
உன்னையும் என்னால இழிவா பேச முடியும்.
முடியாதே! என் உடல் அழகான பச்சை நிறம். அலகோ ரத்தினச் சிவப்பு.
நீ இப்படியே பேசிட்டு இரு. அந்த உணவை நான் சாப்பிடறேன்.
நானும் வருவேன்.


உணவுக்கு ஆசைப்பட்டு இரண்டும் வேடர்கள் விரித்த வலையில் சிக்கின.
குப்பா! இந்தக் கூண்டில் அடை...
சே! அந்தக் காகத்தை வெளியே விடு. கிளிதான் நல்ல விலைக்குப் போகும்.
சோனு வெளியில் வந்தது.
கூண்டு இங்கேயே இருக்கட்டும். குளத்துல குளிச்சிட்டு வரலாம். வா!
இதோ வரேன்.
சோனு! என்னைக் காப்பாற்று. என் அழகே ஆபத்தாகிப் போச்சு.
அழாதே! கூண்டுக் கதவைத் திறக்கறேன்.
மறுநாள் மானுவின் உறவினர்கள் சோனுவைப் பாராட்டினர்.
இப்ப நான் இடத்தைக் காலி செய்யட்டுமா?
வேண்டாம். உன் பக்கத்தில் குடியிருப்பதைப் பெருமையாக நினைக்கிறேன்.

7. கீதாவே உதவினாள்!

பூபதி எழுதிக் கொடுத்திருந்த சீட்டைப் படித்துத் திகைத்துப் போய் நின்றான் மாதவன்.


பூபதி உண்மையாகவே புத்திசாலிதான். பெற்றோர் கொடுத்திருந்த விளம்பரத்தை செய்தித்தாளில் தன்னைப் போலவே பார்த்துவிட்டு, 'மாது இங்கு தான் வரப் போகிறான்' என்பதை சரியாகக் கணக்கிட்டு எத்தனை வேகமாக மாற்று நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்று பூபதியின் அறிவுக்கூர்மையை அந்த நிலையிலும் மனதுக்குள் புகழ்ந்து கொண்டான் மாது.

இனி என்ன செய்வது? பெற்றோரைக் காக்க வேண்டும் என்றால் அவன் பூபதியிடம் சரணடைய வேண்டும். சரணடைந்தால் அவரது கள்ளநோட்டுத் தயாரிப்புக்கு உதவியாக இருக்க வேண்டும். அதாவது நாட்டின் பொருளாதாரத்தையே சீர்குலைக்கும் தேச விரோதச் செயலுக்கு அவனும் உதவியாக இருக்கும்படி இருக்கும். இது நியாயம்தானா? நாட்டை மேம்படுத்த உரிய தொண்டைச் செய்ய முடியாவிட்டாலும் நாட்டுக்குத் துரோகமிழைப்பதையாவது செய்யாமல் இருக்கலாம் அல்லவா? ஆனால், அதற்கு விலையாக அவன் தரவேண்டியது அவன் அன்புப் பெற்றோரை! எத்தனை இக்கட்டான நிலை!



மின்னல் மாதவன்!

வந்தது வரட்டும் என்று பேசாமல் போலீசுக்குப் போய் எல்லாவற்றையும் கூறிவிடலாமா என்ற துடிப்பு எழுந்தது மாதுவுக்கு. அதனால் உடனடியாக பாதிக்கப்படுவோர் பூபதியிடம் சிக்கியுள்ள தனது பெற்றோரே. அவர்களுடைய உயிருக்கே கூட ஆபத்து வரக்கூடும் என்ற எண்ணம் அந்த முடிவைத் தடுத்தது. பூபதியின் பிடியில் இருந்து தப்பிவர,



அவரது அருமைப் பெண் சிறுமி கீதா உதவியது போல் இப்பொழுதும் யாராவது உதவுவார்களா? ஏன், கீதாவே மனது வைத்தால் உதவக்கூடுமே? அவள் இருக்கும் இடத்தில்தானே அவன் பெற்றோர் இருக்கிறார்கள்! கீதா புத்திசாலிச் சிறுமி. நேர்மை உள்ளம் கொண்டவள். அவளோடு எப்படி தொடர்பு கொள்வது?

ஏதேதோ எண்ணிக் குழம்பியிருந்த மாதுவை, எதிர்வீட்டுச் சிறுவன் அழைத்தான்.

“அண்ணா, அண்ணா. தொலைபேசியில் உங்களை யாரோ அழைக்கிறார்கள். வாருங்கள்.”

அழைப்பு யாரிடமிருந்து இருக்கும்? தான் இங்கிருப்பது இத்தனை சரியாக யாருக்குத் தெரியும்? ஒருவேளை பூபதியாகவே இருக்குமோ? தவிப்போடு மாது விரைந்தான். தொலைபேசியைக் கையில் எடுத்தான். “ஹலோ!” என்று குரல்கொடுத்தான்.

“அண்ணா, நான்தான் பூபதியின் பெண் கீதா பேசறேன். உங்க அம்மாவும் அப்பாவும் இங்கேதான் பக்கத்து அறையில் இருக்காங்க. அவங்கதான் இந்த நம்பரைத் தந்தாங்க. பேச நேரமில்லை. திங்கட்கிழமை காலை பத்தரை மணிக்கு பீமாவரம் அஞ்சல் நிலையத்தில் காத்திருப்பேன். அவசியம் வாங்க. உங்க பெற்றோருக்கு ஆபத்து ஒன்றும் இல்லை.”

கீதா பேச்சை முடித்து விட்டாலும் தொலைபேசி ரிசிவரை வைக்கக் கூடத் தோன்றாமல் திகைத்து நின்றான் மாது. “என்னண்ணா! ரிசிவரைக் கூட வைக்காமல் திகைத்து நிக்கறீங்க!” என்று சிறுவன் கேட்டதும்தான் ரிசிவரை வைத்தான். நன்றி கூறிவிட்டுக் கிளம்பினான் மாது.

ரேவதி

எங்கே போவது? கால் போனபோக்கில் நடந்தான். சரியாகச் சாப்பிட்டு இரண்டு நாட்களாகியிருந்ததால் ஒரே பசி. பூபதி வீட்டிலிருந்து தப்பித்து வந்தபோது, கீதா நோட்டும் சில்லறையுமாக ஐம்பது ரூபாய் தந்திருந்தாள். "இதெல்லாம் என் உண்டிப் பணம். எங்கப்பா தயாரிப்பு இல்லே. தைரியமா செலவு பண்ணுங்க" என்று அவள் சிரித்தது கண்முன் நின்றது. நாட்டுத் துரோகியான பூபதிக்கு எத்தகைய உன்னதமான மகள்! கீதா காரணமில்லாமல் தன்னை வரச் சொல்லியிருக்க மாட்டாள். தன் பெற்றோரைத் தப்ப வைக்க ஏதாவது திட்டம் வைத்திருப்பாள் என்று உறுதியாக நம்பினான் மாது. அவன் மனதில் புதிய நம்பிக்கையும் உற்சாகமும் பிறந்தது.

சட்டைப் பையில் செலவு பண்ணினது போக மீதி இருபது ரூபாய் இருந்தது. ஓட்டலுக்குப் போனான். ஓமப்பொடிக்கு ஆர்டர் தந்தான்!

மூன்றாவது மேசையில் காப்பி குடித்துக் கொண்டிருந்த தாடிக்காரர் ஒருவர், வைத்த கண் வாங்காமல் மாதுவையே பார்த்துக் கொண்டிருந்தார். மாதுவும் அவர் தன்னைக் கவனிப்பதை உணர்ந்து விட்டான்.

யாராக இருக்கும்? தன்னை வேவு பார்க்க, தன் நடவடிக்கைகளைக் கவனிக்க பூபதி அனுப்பியவராக இருக்குமோ என்று எண்ணினான் மாது. இருக்கட்டுமே. இந்த இடத்தில் தன்னை என்ன செய்துவிட முடியும் என்ற துணிவும் தோன்றியது.

ஓமப்பொடி வந்தது. இட்லிக்கு ஆர்டர் தந்து விட்டு ஓமப்பொடியைக் கவனித்தான். ஓரக் கண்ணால் தாடிக்காரரையும் கவனித்தான். அவர் காபியைக் குடித்து முடித்து விட்டு பில்லை வாங்கிக் கொண்டு அவன் இருந்த மேசையை நோக்கி வந்தார். காலியாகக் கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அவன் எதிரே உட்கார்ந்து கொண்டார். அவனையே பார்த்தார்.

'புதுப் பிரச்னை வரப்போகிறது. கவனம்!' என்று மாதுவின் மனம் உஷார்ப் படுத்தியது. அவனுக்கு தர்மசங்கடமாக இருந்தது.

"நீ பாலசித்தராக இருந்த சிறுவன் தானே?"

மாதுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தன்னைப் பாவங்களைப் போக்கும் பாலசித்தராக நடிக்க வைத்த அந்த ரௌடிகள் அனுப்பி வைத்த ஆளாக இருக்குமோ? தன்னை மீண்டும் பிடித்துக் கொண்டு போகத்தான் இவர் வந்திருக்கிறாரா? உள்ளம் பதற, ஓடித் தப்பிவிடும் சாக்கில் மாது மெதுவாக எழுந்தான்.

அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்டவர் போல் தாடிக்காரர் கையை நீட்டி அவன் தோளைத் தட்டிக்கொடுத்து, "பயப்படாதே தம்பி. என்னை நம்பு. நான் உண்மையாகவே உனக்கு உதவக் காத்திருக்கும் நண்பன்" என்று மெதுவாகக் கூறிவிட்டுத் தனது விசிட்டிங்கார்டைத் தந்தார். அதில் 'எஸ். விசுவநாதன், வானியல் விஞ்ஞானி' என்று இருந்தது.

'நாம் பயந்தது போல் ரௌடிகளுடன் தொடர்புடைய மோசக்காரர் இல்லை. கௌரவமானவர்தான்' என்று மனதிற்குள் சிறிது அமைதியடைந்தான் மாது.

"தம்பி, உன்னை நான் ரௌடிகள் கூட்டத்தில் பாலசித்தர் என்ற மோசடிக் காரனாக ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். உன்னிடம் என்ன சக்தி இருக்கிறது என்பதை அறியத்தான் நானே நேரில் பக்தனைப் போல் வந்தேன்" என்று அமைதியாகக் கூறிய விசுவநாதன், "தம்பி, உன்னிடம் உள்ள அதிசயமான சக்தியைப்

"கோடி வீட்டைத் தாண்டினா அடுத்தது எங்க வீடுதான். வர்றியா?"

"நான் வரலைடா."

"ஏன்?"

"அவ்வளவு பெரிய வீட்டைத் தாண்ட என்னால முடியாதுடா!"

— சிவ. கண்மணி



பற்றி உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

பதில் கூறுவதற்குள், சர்வர் வந்து, "வேறு என்ன வேணடும்?" என்று மாதுவிடம் கேட்டார். "காபி" என்று அவரை அனுப்பி வைத்தான் மாது.

''தம்பி, உன் பெயரென்ன?'' என்று விசுவநாதன் கேட்டார். ''மாதவன், மாது'' என்று பதிலளித்தான்.

''மாது, உன் பதட்டம், அமைதி இன்றிப் பார்ப்பது எல்லாவற்றையும் கவனிக்கும் போது குழப்பத்துடன் இருக்கிறாய் என்பதை உணர முடிகிறது. நீ எதற்கும் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. என்னை நம்பினால், உனக்குப் பாதுகாப்புத் தருகிறேன். வீட்டில் நானும் என் மனைவியும் மட்டுமே இருக்கிறோம். வேண்டிய உதவிகள் செய்கிறேன். எல்லாம் நீ என்னை நம்புவதைப் பொறுத்திருக்கிறது. நான் வெளியே காரில் காத்திருக்கிறேன். என்னைப் பூரணமாக நம்பினால் காரில் வந்து ஏறிக் கொள். அதற்காக உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன். பிறகு உன் விருப்பம்.''

அமைதியாகக் கூறிவிட்டு விசுவநாதன் வெளியே போய் விட்டார். காபி வந்தது. மாது யோசித்தபடியே சிறிது சிறிதாக உறிஞ்சிக் குடித்து விட்டு எழுந்தான். பில்லுக்குக் காசைக் கொடுத்து விட்டு வெளியே வந்தான். வலது பக்கத்தில் காரின் டிரைவர் இருக்கையில் இருந்தபடி காத்திருந்தார் விசுவநாதன். அவனைப் பார்த்ததும் புன்னகைத்தார். ஒரு முடிவுக்கு வந்தவனாக மாது காரை நெருங்கினான்.

''நான் உங்களோடு வருகிறேன் சார்.''

''விசுவநாதன் மகிழ்ச்சியோடு காரின் கதவைத் திறந்துவிட, மாது ஏறி உட்கார்ந்து கொண்டான். கார் கிளம்பியது.

''மாது, எதையுமே மறைக்காது உன்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் கூறு.''

மாதவன் எந்த ஒன்றையும் மறைக்காமல், கீதாவிடமிருந்து டெலிபோன் வந்தது வரை விசுவநாதனிடம் கூறி முடித்தான்.

"கீதாவைப் போன்ற நல்ல பண்புகள் வாய்ந்த ஒரு சிறுமியைக் காண்பது அரிது. உன் பெற்றோரைத் தப்புவிக்க அவளே ஏதாவது வழி செய்திருப்பாள் என்றே தோன்றுகிறது. நானே உன்னை பீமாவரம் அழைத்துப் போகிறேன்" என்று பொறுப்பை ஏற்றுக் கொண்டார் விசுவநாதன்.


பல நாட்களுக்குப் பிறகு விசுவநாதனின் வீட்டில், மன நிம்மதியோடு தூங்கினான் மாது. திங்கட் கிழமை சரியாகப் பத்து மணிக்கு பீமாவரம் அஞ்சலகத்தில் மாது இருந்தான். தெருமுனையில் காருடன் தயாராகக் காத்திருந்தார் விசுவநாதன்.

பள்ளிக்குப் போகிறவளாகக் காணப்பட்ட கீதா, சில நிமிடங்களில் வந்து விட்டாள். முகத்தில் பதற்றம். "அண்ணா, உடனே கிளம்பியாக வேண்டும். இங்கே தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் ஆபத்து.'' என்று அவள் பரபரத்தாள். அவளை அழைத்துக் கொண்டு காருக்கு விரைந்தான் மாது. விசுவநாதனை அறிமுகப்படுத்தி வைத்தான்.

''அண்ணா, எங்கிருந்தாவது எங்கப் பாவுக்கு போன் பண்ண வேண்டும். நீங்கள் என்னைக் கடத்தி வந்து விட்டதாகவும் உங்கள் பெற்றோரை உங்கள் வீட்டில் பாதுகாப்பாகக் கொண்டு வந்து விட்டால்தான், கடத்தி வந்துள்ள என்னை அனுப்பி வைக்க முடியும் என்று நீங்கள் நிபந்தனை போடுவதாகவும் அப்பாவுக்கு போன் பண்ண வேண்டும்'' என்றாள் கீதா.

முதலில் அதிர்ந்தாலும் மாது, கீதாவின் திட்டத்தைப் புரிந்து கொண்டு வியந்தான். அவளைப் பாராட்டி நன்றிப் பெருக்கால் கையைப் பற்றிக் கொண்டு அழுதான்.

(அடுத்த இதழில் முடியும்)



''சுடன் கார்டன் மைதானத்தில் அடிக்கடி கல் வீசுறாங்களே ஏன்?''

''அதுதான் 'கல்'கத்தாவில் இருக்குதே!''

– நெல்லை எஸ். திலகம்

சின்னச்



நல்ல பாம்புகள் எங்கு வாழ்கின்றன?

இந்தியன் கோப்ரா என்றழைக்கப்படும் நல்ல பாம்புகள் தெற்காசியாவில் காணப்படுகின்றன. இவற்றிற்கு அச்சம் ஏற்படும்போது கழுத்தில் உள்ள சதை விரியும். இதையே 'பாம்பு படம்' எடுக்கிறது என்று கூறுகிறோம். எதிரியை அச்சுறுத்தவே நல்ல பாம்பு இவ்வாறு படம் எடுக்கிறது. ஆப்பிரிக்காவில் ரிங்ஹல்ஸ் (Ringhals) என்ற பாம்புகளும் அமெரிக்கக் காடுகளில் வாழும் சிவப்புப் பட்டையுடைய கோரல் பாம்புகளும் (Coral Snake) நல்ல பாம்பு குடும்பத்தைச் சேர்ந்தவை.

தவளைகள் குதிப்பது எப்படி?

தவளைகள் நீந்துவதற்கும் குதிப்பதற்கும் ஒரே முறையைக் கையாளுகின்றன. முன்னங்கால்களை நிலத்தில் ஊன்றி வலுவான பின்னங்கால்களுக்கு அழுத்தத்தைக் கொடுத்துத் தாவுகின்றன. ஒருமுறை குதித்த பின் நிலத்தை அடைந்தவுடன் முன்னங்கால்கள் மார்புக்கடியில் வந்து பின்னங்கால்களுக்காகக் காத்திருக்கும். பின்னங்கால்கள் வந்து சேர்ந்ததும் அடுத்த தாவலுக்கு முன்னங்கால்கள் தயாராகி விடும்.



சின்னச் செய்திகள்!

மரத்தவளைகள் மரத்தில் ஏறுவது எப்படி?

மரத்தவளைகளின் கால் விரல்களில் வட்ட வடிவமான தட்டுப் போன்ற பகுதி காணப்படுகிறது. இதன் உதவியால் மென்மையான இலைகள், தண்டுகள், மரங்களில் கால்களைப் பதித்து ஏறி விடுகின்றன.





பச்சோந்தி எவ்வாறு இரண்டு இடங்களையும் ஒரே நேரத்தில் பார்க்கிறது?

பச்சோந்திகள் இரண்டு கண்களையும் ஒரே நேரத்தில் சுழற்றக் கூடியவை. ஒரு கண் முன்புறத்தையும் மற்றொரு கண் பின்புறத்தையும் பார்க்கும். இரண்டு கண்களும் ஒரே பொருளைப் பார்க்கும் விதத்திலும் பச்சோந்தியால் செயல்பட முடியும்.



ஊர்வன வகை பிராணிகள் தங்கள் நாக்குகளை வெளியே நீட்டுவது ஏன்?


இந்த மானிட்டர் பல்லி நாக்கை எப்படி வெளியே நீட்டிக் கொண்டிருக்கிறது பாருங்கள்! சில நேரம் நாக்கு நிலத்தைத் தொடும். சில நேரம் காற்றில் படும். இந்த நாக்கு நுகரும் உறுப்பாகச் செயல்பட்டு உணவு மற்றும் எதிரிகளைக் கண்டறிய உதவுகிறது. பலவித பல்லிகள் மற்றும் பாம்புகளின் நாக்குகள் இவ்வாறு செயல் படுகின்றன.


வித்தியாசம் என்ன?

முதலைகளில் இரண்டு வகைகள் உள்ளன. குரோகோடைல் முதலைக்கு வாய் மூடியிருக்கும்போது கீழ்த் தாடையில் உள்ள நான்காவது பல் வெளியே தெரியுமாறு மேல் நோக்கி நீண்டிருக்கும். அலிகேட்டர் முதலைக்கு இந்தப் பல் வெளியே தெரியாமல் உள்ளேயே இருக்கும்.




ஒளிந்திருக்கும் வார்த்தைகளைக் கண்டுபிடியுங்கள்!























இரண்டு தொகுதிகளாகப் பதினைந்து படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் உள்ள படங்களின் முதல் எழுத்துகளையும் இரண்டாவது தொகுதியில் உள்ள படங்


கோடை விடுமுறைப் போட்டி – I


II
















களின் இரண்டாவது எழுத்துகளையும் சேர்த்து எழுதிப் பாருங்கள். வெயிலுக்கு இதமான நான்கு வார்த்தைகள் கிடைக்கும். இந்த வார்த்தைகளைக் கண்டுபிடித்து எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 31.5.99. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு குலுக்கல் முறையில் முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. அடுத்த இதழில் கோடை விடுமுறைப் போட்டி – II


ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

மயில் வாகன மகோற்கடர்!

ஒரு சமயம் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் கடும் போர் நடந்தது. தேவர்கள் வேத சாஸ்திரங்களை பாணங்களாக்கி அசுரர்கள் மேல் எய்ய, அசுரர்கள் பல பேர் மடிந்தனர். எஞ்சி உயிர் பிழைத்தவர்கள் அசுரேந்திரன் சங்காசுரனிடம் சரண் அடைந்தனர்.

சங்காசுரனின் தம்பி கமலாசுரன் தவம் செய்து ஏராளமான வரங்கள் பெற்றவன். மிகுந்த பலசாலி. அவனிடம் சங்காசுரன், "தம்பி! இந்த தேவர்களின் கொட்டத்தை அடக்க வேண்டும்! வேதங்களைத் திருடிக் கொண்டு வந்து நடுக்கடலில் போட்டு விடு. யாக, ஹோமாதிகள் நடக்காமல் பூலோகம் அழியட்டும். பிரம்மா இப்போது யோக நிஷ்டையில் இருக்கிறார். இதுதான் நல்ல தருணம்" என்று உத்தரவிட்டான்.

கமலாசுரனும் அண்ணனின் சொற்படி செய்தான். விழித்துப் பார்த்த நான்முகன் வேதச்




ஆர். பொன்னம்மாள்

சுவடிகளைக் காணாமல் திடுக்கிட்டார். திருப்பாற் கடலுக்கு ஓடினார். அங்கே மகாவிஷ்ணு யோக நித்திரையில் ஆழ்ந்திருப்பதைப் பார்த்து கைலாயம் சென்றார்.

பரம சிவனிடம் நடந்ததைக் கூறினார். சிவபெருமான் "நித்திரை கலைந்ததும் சங்காசுரனை ஸ்ரீஹரி வதம் செய்து வேதங்களை மீட்பார். கமலாசுரனை அழிக்க விநாயகரைப் பிரார்த்தனை செய்" என்றார்.

பிரம்மாவும் விநாயகரை வேண்ட, விநாயகர் தோன்றி, "வேதம், ஆகமம், புராணம் மூன்றும் என் விழிகளாகும். தர்மத்தை நான் தழைக்கச் செய்கிறேன்" என்று உறுதி கொடுத்தார்.

அந்தண வடிவெடுத்து சுந்தர வனம் சென்றார். அங்கே கார்க்கியர்



போன்ற ரிஷிகள் கமலாசுரனுக்குப் பயந்து வாழ்ந்து வந்தனர்.

பூதகணங்களையெல்லாம் சீடர்களாக்கிக் கொண்டு அங்கே வந்த கணேசரை கார்க்கியர் முதலான ரிஷிகள் வரவேற்றனர்.

"ஸ்வாமி! நாங்கள் கமலாசுரனுக்கு அஞ்சி

இங்கே குடி இருக்கிறோம். இங்கே நன்றாக தங்களை உபசரிக்க முடியவில்லை. இருப்பதை ஏற்று எங்களை ஆசீர்வதிக்க வேண்டும்" என வேண்டினர்.

கணபதி, "முனிவர்களே! என் பெயர் மல்லாலன். அசுரர்கள் வேதங்களைக் கடலில் போட்டு விட்டதால் உலகில் தர்மகாரியங்கள் நசிந்து வருகின்றன. இது எனக்கு மிகவும் மன வேதனையை அளிக்கிறது. என்னிடம் பழைய வேதச் சுவடிகள் உள்ளன. அதை மற்றவர் படித்துப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். நான் அதை உங்களுக்கு உபதேசம் செய்யவே வந்துள்ளேன்! என் சீடர்கள் இந்த முட்செடிகளைத் திருத்தி பழமரங்களை நடுவார்கள். இந்த சுந்தரவனம் பெயருக்கேற்றபடி சுந்தரச் சோலையாக மாறும். கவலையை விடுங்கள்'' என்று ஆறுதலளித்தார்.

முனிவர்கள் மகிழ்ந்தனர். தினமும் விக்னேஸ்வரர் அவர்களுக்கு வேத பாடம் நடத்தினார். பூதகணங்களாக உள்ள சிஷ்யர்கள் முட் செடி, கொடிகளை அகற்றி பழமரங்களும், பூச் செடிகளும் அமைத்தனர். ஆழமான குளம் ஒன்று வெட்டினர். முனிவர்கள் வேள்வி நடத்த அதை யாரும் கலைக்காதபடி காவல் காத்தனர்.

இதையெல்லாம் ஒற்றர்கள் மூலம் தெரிந்து கொண்ட சங்காசுரன் கோபம் கொண்டு கமலாசுரனைப் பெரும் படையோடு யுத்தத்திற்கு அனுப்பினான்.

இதை அறிந்த முனிவர்கள் நடுங்கினர். பிள்ளையார் தன் சுய உருவை வெளிப்படுத்தி அவர்களுக்குத் தைரியம் சொன்னார். விநாயகரின் முறம் போன்ற காதுகளிலிருந்து ஏராளமான வீரர்கள் வெளிப்பட்டு கமலாசுரன் படையோடு யுத்தம் செய்தனர்.

கமலாசுரன் தேர், குதிரை, யானை போன்ற வாகனங்களில் யுத்தம் செய்யும் போது கணேசர் தரையில் நின்று போரிடுவதைப் பார்த்தார்கள் முனிவர்கள்! அவருக்கு ஒரு அழகான உன்னத வாகனம் வேண்டுமென்று நினைத்து ஒரு யாகம் நடத்தினர்.

யாகத்திலிருந்து பிரம்மாண்டமான மயில் ஒன்று தோன்றி அகவியது. மயிலின் குரல் கர்ண கடூரமாயிருக்கும். அது கோபமாய் கத்தியதைக் கேட்டு கமலாசுரனின் படையினர் ஓடத் தொடங்கினர். விநாயகரை அந்த மயில் மேல் ஏறிப் போரிடும்படி முனிவர்கள் வேண்ட, அவர் மயில் மேல் ஏறிப் போர் செய்தார். கமலாசுரன் வருணாஸ்திரத்தை ஏவ, யுத்த களமெங்கும் ஒரே மழை! மயில் தோகை விரித்து ஆட ஆரம்பித்து விட்டது!

விநாயகர் மேகாஸ்திரத்தை விட, மேகங்கள் திரண்டு வந்து சொட்டு நீர் இல்லாமல் குடித்து விட்டது! அசுரன் நாகாஸ்திரம் விட, விக்னேஸ்வரரின் படை வீரர்கள் நாக விஷத்தால் மயங்கி வீழ்ந்தனர்.

விநாயகர் கோபத்துடன் கருடாஸ்திரம் எய்ய பல நூறு கருடர்கள் தோன்றி சர்ப்பங்களைத் துண்டு துண்டாக்கினர். வீரர்கள் மயக்கம் தெளிந்து எழுந்தனர். அசுரன் ஆக்னேயாஸ்திரத்தை ஏவ, விநாயகர் படைகளுக்குத் தீ பரவியது.

கணேசர் கங்கையை வேண்ட நீர் பொழிந்து தீ அணைந்து போயிற்று. அன்றைக்கு சூரியன் அஸ்தமிக்கவே போர் நிறுத்தப்பட்டது.

கணபதிக்கு சித்தி, புத்தி என்று இரு மனைவியர். மறுநாள் யுத்தத்திற்குப் புறப்படும்போது புத்தி தேவி படையைத் தான் நடத்திச் செல்ல அனுமதி கேட்டார். கணேசரும் சந்தோஷமாக சம்மதித்தார்.

"நான் புதுசா எடுக்கற படத்துக்கு ஒரு வித்தியாசமான பேர் வையுங்களேன்."

"'படம் பார்க்காதீர்கள்'னு பேர் வைக்கலாம்!"

சந்தியூர் ஏ. கோவிந்தன்



புத்தி தேவியின் படைகளை நிர்மூலமாக்கினான் கமலாசுரன். இதனால் கோபமுற்ற புத்திதேவி ஒரு மானஸ புத்திரனை உண்டாக்கினாள்.

"மகனே! தந்தையிடம் சென்று ஆசி வாங்கிக் கொண்டு யுத்தத்திற்கு வா" என்று பிள்ளையாரிடம் அனுப்பினாள் புத்தி தேவி.

விநாயகர் தன்னை வணங்கிய புத்திமைந்தனைப் பார்த்து "குமாரா! உன்னால் தேவர்களும், முனிவர்களும் பல லாபங்களை அடையப் போகிறார்கள். அதனால் உனக்கு லாபன் என்று பெயர் சூட்டுகிறேன். உன் தாய்க்குத் துணையாக இருந்து வெற்றி பெறுவாயாக!" என்று வாழ்த்தினார்.


லாபன் கமலாசுரன் படைகளை சின்னாபின்னப்படுத்தினான். வெகுண்ட அசுரன் மோகனாஸ்திரத்தை ஏவினான். அனைத்து வீரர்களும் மோகனாஸ்திரத்தால் மயங்கி விழுந்தனர். லாபன் மட்டும் கம்பீரமாக நின்றதைக் கண்டு ஆச்சரியப்பட்டான் கமலன்.

ஆறு நாட்கள் கமலனும், லாபனும் கடும் போர் புரிந்தனர். தனியனாகிப் போன அசுரன் புறமுதுகிட்டு ஓடினான். சுந்தரவனத்துக்குத் திரும்பிய லாபன் முனிவர்களும், சித்தி, புத்தி தேவியரும் சோகமாய் இருப்பது கண்டு திடுக்கிட்டான். ஆசிரமத்துக்குள் சென்று பார்த்தான். அங்கே விநாயகர் மயக்கமாகி இருந்தார்.

"உன் தந்தை ஆறு நாட்களாய் மோகனாஸ்திரத்தின் தாக்குதலால் மயங்கிக் கிடக்கிறார். இதற்கு நிவாரணம் என்ன?" என்று கேட்டாள் புத்திதேவி.

"அம்மா! பெயர் சூட்டி போருக்கு அனுப்பிய தந்தையை மறுமுறை பார்க்கும் அதிர்ஷ்டமற்ற நான் உலகில் வாழ விரும்பவில்லை! தந்தையின் இந்த அவலத்துக்கு நானே காரணம் என்ற உறுத்தல் என்னை வாளாய் அறுக்கிறது" என்று கூறியவன், அக்கினியை வளர்த்தான்.

மும்முறை வலம் வந்தான். கார்க்கியர் போன்ற ரிஷிகளும், சித்தி, புத்தி தேவியரும் எத்தனையோ சமாதானம் செய்தனர்.



"எதைப் பத்தி பலமா யோசனை பண்ணிக்கிட்டிருக்கே?"

"'எதைப் பத்தி யோசனை பண்ணலாம்' என்பதைப் பற்றிதான் யோசனை பண்றேன்!"

– பாண்டமங்கலம் ஜி. குமரேசன்

"லாபம் என்ற பெயரை வைத்துக் கொண்டு தந்தையை நஷ்டமாக்கிக் கொள்ள விரும்பவில்லை" என்று தீர்மானமாகச் சொன்னவன், தீயில் குதிக்கும் சமயம் சரேலென்று தும்பிக்கையால் மகனைக் கட்டி இழுத்தார் விநாயகர்.

"லாபா! உனக்கு என் மேல் உள்ள பாசத்தை உலகத்துக்குப் புரிய வைக்க நான் நடத்திய திருவிளையாடல்தான் இந்த மயக்கம். வா, நாம் இருவருமாகப் போய் அந்தக் கமலாசுரனை அழித்து விட்டு வருவோம்" என்ற விநாயகர் மயில் மேல் ஏறிக் கொண்டு மகனுடன் புறப்பட்டார்.

கமலாசுரன் மீண்டும் நான்கு வகைச் சேனையுடன் போருக்கு வந்தான். கமலாசுரன் இரத்தத் துளிகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு கமலாசுரன் தோன்றினான். லாபன், சித்தி புத்தியரை மானசிகமாகப் பிரார்த்திக்க அவர்கள் ஒன்பது கோடி பூதங்களைத் தோற்றுவித்து அனுப்பினர். அந்த பூதங்கள் கமலாசுரனின் இரத்தம் கீழே விழாதபடி உறிஞ்சிக்குடித்து விட்டன.

சூலத்தால் கமலனை மூன்று துண்டுகளாக்கினார் விக்னேஸ்வரர். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். லாபனையும், சித்தி, புத்தி, வினாயகரையும் முனிவர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அன்று முதல் மயில் வாகன மகோற்கடர் என்ற பெயரும் விநாயகருக்கு ஏற்பட்டது.


FREE LABELS



டிக்கெட் எங்கே?

எஸ். ஆர் .ஜி. சுந்தரம்



காட்சி – 1

இடம்: முரளி வீடு

அப்பா: (உள்ளே வந்தபடி) முரளி! என்னடா இதெல்லாம்? சுத்தரிக்கோல், பிளேடு பக்கத்துலே வச்சுக்கிட்டு என்ன செய்துக்கிட்டிருக்கே?

ஸ்ரீநிதி: அப்பா இவன் பள்ளிக்கூடத்துலே சரித்திர சம்பந்தமா கண்காட்சி நடத்தப் போறாங்களாம்!

முரளி: ஆமாம்ப்பா! அதுக்காகத்தான் அட்டையால ஒரு கோட்டை கட்டிக்கிட்டிருக்கேன்.

அம்மா: மணி எட்டாச்சு! சாப்பிடக்கூட வரமாட்டேங்கறான். ஹாலை எப்படி குப்பையாக்கி வச்சிருக்கான் பாருங்க!

ஸ்ரீநிதி: ஹை! என்னப்பா இது பையிலே? புது 'ஷூ'வா? நல்லாயிருக்குப்பா!

அப்பா: ஆமாம்! அப்படியே வெளியே எடுத்து அந்த நாடா கட்டில் கிழே வை. நாளைக்குப் போட்டுக்கிட்டுப் போகணும்!

முரளி: அப்பா உங்களுக்கு ஷூ! எங்களுக்கு?

அப்பா: ம்! உங்களுக்கும் ஒண்ணு வாங்கிக்கிட்டு வந்திருக்கேன். என்னன்னு சொல்லுங்க பார்க்கலாம்?

முரளி: ம்! கல்கத்தா ரசகுல்லா!

அப்பா: இல்லை!

ஸ்ரீநிதி: நான் சொல்றேன்! புது டிரஸ்!

அப்பா: அதுவும் இல்லை, இதோ பாருங்க!

முரளி: ஹை, இது வரப்போற கிரிக்கெட் மாட்ச்சுக்கான சீசன் டிக்கெட்!

ஸ்ரீநிதி: அப்பா! இப்படிக் கொடுங்கப்பா. நாலு பேரும் போகலாம்.

அம்மா: ம்! சீசன் டிக்கெட் வந்தாச்சா? இனிமேல் வீட்டுலே ஒரே அமர்க்களம்தான்!

அப்பா: டேய் முரளி, சீசன் டிக்கெட்டை அவகிட்டேயிருந்து பிடுங்காதேடா. உன் கையெல்லாம் கோந்தும், அழுக்குமா இருக்கு பாரு! அப்புறமா மெதுவா பாரு!

ஸ்ரீநிதி: அப்பா, இதை உங்க மேஜைமேல இருக்கிற லெட்டர்ஸ் ஸ்டேண்டுலே வைக்கறேன்!

அம்மா: சரி, சரி, எல்லாரும் சாப்பிட வாங்க!

காட்சி – 2

இடம்: முரளி வீடு

ஸ்ரீ நிதி: டேய் முரளி! என்னடா டார்ச் லைட் அடிச்சு, நாடா கட்டில் அடியிலே எதையோ தேடிக்கிட்டிருக்கே?

முரளி: புதுசா வாங்கின என்னோட 'உட்டன்பால்' அதான் மரப்பந்து கட்டிலுக்கடியிலே உருண்டு போயிருச்சு. உள்ளே ஒரே அடைசல். பந்து எங்கே

போச்சுன்னு தெரியலே!

அப்பா: டேய் முரளி! 'லெட்டர்ஸ் ஸ்டேண்டு' பக்கத்துலே, ஒரு பிளாஸ்டிக் பெட்டியிலே கத்தரிக்கோல் இருக்கும். எடுத்துக்கிட்டுவா. (முரளி போகிறான்)

ஸ்ரீநிதி: எதுக்குப்பா கத்தரிக்கோல்?

அப்பா: ஒரு முக்கியமான கவர் கூரியர்லே வந்திருக்கு! உள்ளே பத்தாயிரம் ரூபாய்க்கு செக் இருக்கு! இந்தக் கவரோட எந்த ஓரத்தையும் கிழிக்கத் தயக்கமாயிருக்கு. எவ்வளவு 'டைட்'டா உள்ளே கடிதத்தையும் செக்கையும் வச்சு அனுப்பியிருக்காங்க பாரு! கத்தரிக்கோலால கவர் வாயை நூலிழை மாதிரி எச்சரிக்கையா கத்தரிச்சாதான், உள்ளே இருக்கிறதை சேதமாகாம வெளியே எடுக்க முடியும்! முரளி, கத்தரிக்கோல் என்ன ஆச்சு?

முரளி: அப்பா கத்தரிக்கோலை அங்கே காணோம்!

அப்பா: என்னது காணோமா? நேத்து நீதானே அந்தக் கத்தரிக்கோலை வச்சுக்கிட்டு அட்டையை கத்தரிச்சுக்கிட்டிருந்தே?

ஸ்ரீநிதி: ஆமாம்! எங்கே வச்சே அந்தக் கத்தரிக்கோலை? மறுபடியும் அப்பா டேபிள் மேல் கொண்டு போய் வச்சியா இல்லையா?

அப்பா: வச்சிருக்க மாட்டியே? எந்தப் பொருளை எடுத்தாலும் அப்படியே கண்ட இடத்திலே போட்டுருவியே. சரி, எதிர்வீட்டுலேயிருந்து கேட்டு வாங்கிட்டுவா! (முரளி போகிறான்)

ஸ்ரீநிதி: அப்பா, இதை பிளேடுலே 'கட்' பண்ணலாமா?

அப்பா: இல்லேம்மா, கத்தரிக்கோல் தான் நல்லது! (முரளி திரும்பி வருகிறான்)

முரளி: அப்பா, அவங்க கொடுக்க மாட்டேனுட்டாங்க!

ஸ்ரீநிதி: எப்படி கொடுப்பாங்க? ஒரு தடவை நீ அவங்க வீட்டுலேயிருந்து கலர் பாக்ஸை வாங்கிட்டு வந்தே. சொன்னபடி உடனே கொடுக்காம, ஒரு வாரம் கழிச்சு தேடி எடுத்துக் கொடுத்தே.

அப்பா: ஓ... இது வேற நடந்திருக்கா? சரி, சரி, இந்தக் கவரை நான் ஆபிஸிலே போய் கட் பண்ணிக்கறேன். அந்தப் புது ஷூவை எடு ஸ்ரீநிதி!

ஸ்ரீநிதி: ஐயய்யயோ!

அப்பா: என்னம்மா?

ஸ்ரீநிதி: கத்தரிக்கோல் ஷூக்குள்ளே விழுந்திருக்கு பாருங்க! நீங்க அவசரமா காலை நுழைச்சிருந்தா பாதத்தைக் குத்தியிருக்கும்!


அப்பா: ஷூக்குள்ளே எப்படி கத்தரிக்கோல் வந்தது?

முரளி: அப்பா, இப்பதான் நினைவுக்கு வருது. நேத்து நான் அட்டை வெட்டி ஒட்டற வேலை செய்துக்கிட்டிருந்தப்போ இந்தக் கத்தரிக்கோலை நாடா கட்டில் மேல்தான் வச்சேன்.

ஸ்ரீநிதி: அப்போ கரெக்ட்! இந்த நாடாக்கள் லூசா விலகியிருக்கறதால, கத்தரிக்கோல் நழுவி ஷூ வாய்க்குள்ளே விழுந்திருக்கு! இந்தாங்கப்பா!

அப்பா: சரி, இந்தக் கத்தரிக்கோலை டேபிள் மேலேயே கொண்டு வச்சுடும்மா. எனக்கு ஆபீஸுக்கு நேரமாச்சு!

ஸ்ரீநிதி: முரளி! பார்த்தியா? உன்னால அப்பாவுக்கு எவ்வளவு தொல்லை! இனிமே உடனுக்குடனே அந்தந்தப் பொருளை அங்கங்கே வைக்கப் பழகிக்கோ!



காட்சி – 3

இடம்: முரளி வீடு.

அம்மா: அச்சச்சோ லைட் போச்சு!

ஸ்ரீநிதி: ச்சே! நம்ம பகுதியிலேதான் அடிக்கடி இப்படி மின்வெட்டு வருது.

அம்மா: இன்னிக்கு அமாவாசை வேற... ஒரே கும்மிருட்டாயிருக்குது.

அப்பா: எல்லோரும் இருக்கிற இடத்துலேயே உட்கார்ந்துக்கிட்டிருங்க. நான் டார்ச் லைட்டை எடுக்கறேன். ஸ்ரீநிதி! எங்கேம்மா டார்ச் லைட்டைக் காணோம்? வழக்கமா இந்த டைனிங் டேபிள் மேல சுவத்தோரமாதானே வச்சிருப்போம்! எங்கே போச்சு?

ஸ்ரீநிதி: என்ன முரளி பேசாம இருக்கே. நேத்து நீதானே கட்டிலடியிலே போன பந்தை டார்ச் லைட் அடிச்சுத் தேடிக்கிட்டிருந்தே?

அம்மா: என்னடா முரளி, உனக்கு எத்தனை தடவை சொல்றது? வீட்டுலே ஒரு மெழுகுவர்த்திகூட இல்லே...

ஸ்ரீநிதி: இருங்கம்மா! நான் கீழே போய் அனு வீட்லே இருந்தா ஒண்ணு வாங்கிட்டு வரேன்.

அப்பா: படிக்கட்டுலே பார்த்து இறங்கு. ஜாக்கிரதை! டேய் முரளி, நீ என்னடா ஓசைப்படுத்தறே!

முரளி: கட்டில் கீழே டார்ச் லைட் இருக்கான்னு பார்க்கறேன்!

அப்பா: பேசாம இரு. வெளிச்சம் வந்ததும் பார்க்கலாம்.

ஸ்ரீநிதி: ஆ! அம்மா... அப்பா!

அம்மா: ஸ்ரீநிதி என்னாச்சு? (விளக்குகள் எரிகின்றன)

ஸ்ரீநிதி: (நொண்டியபடி வந்து) ஆ... அம்மா... எல்லாம் இந்த முரளியால தாம்மா.... அவனோட வழவழ பந்தை வராந்தாவிலேயே போட்டுட்டு வந்திருக்கான்... இருட்டுலே அதுமேல காலை வச்சுட்டேன்... நல்லா வழுக்கிடுச்சு. வலிக்கிறது. காலை கீழே வைக்க முடியலேப்பா!

அப்பா: சரி, வா டாக்டர் வீட்டுக்குப் போகலாம்!



அம்மா: டேய் முரளி, உடனே அந்தப் பந்தை எடுத்து உன் அலமாரியிலே வச்சுக்க... என்னடா திடீர்னு தண்ணீர் பாட்டிலைக் 'கிளீன்' பண்ணிக்கிட்டிருக்கே?

முரளி: நாளையிலேயிருந்து கிரிக்கெட் மாட்ச்! அதுக்குத்தான் தயார் பண்றேன்.

காட்சி – 4

இடம்: முரளி வீடு

அப்பா: (கோபத்துடன்) என்னடா இன்னும் தேடிக்கிட்டிருக்கே? எங்கேடா வச்சே டிக்கெட்டை?

ஸ்ரீநிதி: மணியாச்சுடா முரளி! சீக்கிரமா நினைவு படுத்திப்பாரு! அன்னிக்கு உன் நண்பன் விமலுக்குக் காட்டினே இல்லே, அதுக்கப்புறம் அப்பாவோட 'லெட்டர் ஸ்டேண்டுலே' திருப்பிக் கொண்டு போய் வச்சியா இல்லையா?

முரளி: 'லெட்டர் ஸ்டேண்டு'லே வைக்கலே! இதோ என் புத்தக அலமாரியிலே இங்கேதான் வச்சேன். இந்த இடத்துலே ஒரு லைப்ரரி புத்தகம்கூட இருந்தது!

ஸ்ரீநிதி: நல்லா நினைவு படுத்திச் சொல்லு... புத்தகத்துமேல வச்சியா, அடியிலே வச்சியா?

முரளி: ம்! இல்லே... புத்தகத்துக் குள்ளேதான் வச்சுட்டு, விமலோடு வெளியே போனேன்.

அம்மா: அந்தப் புத்தகம் அவசரமா வேணும்னு லைப்ரரியை நடத்தறவங்களே இப்பத்தான் வந்து வாங்கிக்கிட்டுப் போனாங்க!

அப்பா: சரி, கைக்கெட்டினது வாய்க் கெட்டாம போயிருச்சு. மாட்சை மறந்துடுங்க.

ஸ்ரீநிதி: அப்பா முரளி அழறான்.

அப்பா: நல்லா அழட்டும்! எவ்வளவு தடவை உனக்கு நாங்க திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கோம்! வரிசையா எவ்வளவு தொல்லைகள் வந்திருக்குபாரு!

அம்மா: நல்லவேளை! ஸ்ரீநிதியோட கால்லே எலும்பு முறிவு ஏற்படலே.

அப்பா: முரளி! எல்லாத்துக்கும் உன்னோட கவனக்குறைவும் அலட்சியமும்தான் காரணம். அதனாலதான் இப்போ நமக்குக் கிரிக்கெட் மாட்சும் பார்க்க முடியாம போயிருச்சு.

முரளி: தப்புதான்! இப்பத்தான் எனக்கு எல்லாம் புரிஞ்சுது. இனிமே அந்தந்தப் பொருளை அந்தந்த இடத்துலேயே வைக்கறேன். இது எவ்வளவு நல்ல பழக்கம்கிறதையும் தெரிஞ்சுக்கிட்டேன்!

அப்பா: (போன் அடிக்க எடுத்துப் பேசுகிறார்) ஆமாம்! முரளி அப்பாதான் பேசறேன்! அப்படியா? ரொம்ப நன்றி! சீக்கிரம் அனுப்பி வையுங்க! முரளி, ஸ்ரீநிதி! புத்தகத்துலே இருந்த டிக்கெட் மறுபடியும் நம்மைத்தேடி வந்துக்கிட்டிருக்கு! புறப்படத் தயாராயிருங்க! டேய் முரளி, எங்கேடா மாடிக்குப் போறே?

முரளி: மாடியறையிலே அம்மா பேனாவை மறந்து வச்சுட்டேன். எடுத்துக்கிட்டு வந்து அம்மா 'ஹேண்ட் பேக்'கிலேயே வச்சுடறேன்!

ஸ்ரீநிதி: இப்பதான் நீ என் தம்பி!

''உங்க தாத்தா ஏன் காலை ஆட்டிட்டே இருக்கார்?''

''அவர் பெயர் தான் 'ஆடியபாதம்'னு சொன்னேனே!''

– காழி ஆர். சீதாராமன்





ஒளிமயமான எதிர் காலம்...

கத்திக் கத்தி காக்கை அக்கா
என்ன சொல்கி றார்? — நமைக்
கல்வி யிலே கவனம் நன்றாய்க்
காட்டச் சொல்கி றார்.

கூவிக் கூவிக் குயில் அரசி
என்ன சொல்கி றார்? — நல்ல
குழந்தை களாய் நாளும் நமை
வளரச் சொல்கி றார்.

முகத்தை முகத்தைக் காட்டி முயல்
என்ன சொல்கி றார்? — நல்ல
முயற்சி களைத் தொடர்ச்சி யாகச்
செய்யச் சொல்கி றார்.

இவர்கள் எல்லாம் சொல்லு வதைக்
கேட்டு நடந் தால் — நம்
எதிர் காலமே ஒளி மயமாய்
இருக்கும் அல்ல வா?

— ரா. பொன்ராசன்




குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 க	ண்	ண	2 கி	■	3 நூ	த	ன	ம்
ற்	■	■	ண்	■	ல்	■	■	ல
4 க	ரை	■	ண	■	■	ஸ்	ரி	5 பா
ண்	■	■	ம்	6 ர	7 வா	■	■	■
டு	ண்	8 வ	■	த	■	9 வை	ர	ம்
■	■	■	10 வே	ம்	11 பு	■	■	ய
12 து	ணி	வு	■	■	ர	■	13 தி	சை
த்	■	■	14 ஹ	■	த	■	■	ச்
15 மு	ம்	தா	ஜ்	■	ம்	த	ர	16 ப



மா, பலா, வாழையில் எந்தப்



படம் எங்கே?


ஓவியப் பாட வேளை. ஏதாவது ஒரு படம் வரைந்து, அதற்குப் பொருத்தமான தலைப்பும் வைக்கும்படி கூறினார் ஆசிரியர். அரைமணி நேரம் கழித்து ஒவ்வொருவருடைய படத்தையும் பார்வையிட்டார். என் தோழியின் பேப்பரை பார்த்தவர் திடுக்கிட்டு "எல்லோரும் வரைந்திருக்கும்போது, நீ வெறும் தலைப்பை எழுதிட்டு உட்கார்ந்திருக்கியே, ஏன்?" என்று கோபமாகக் கேட்டார். "சார்! என் தலைப்பு 'குதிரை புல்லை மேய்ந்து விட்டுச் சென்றது' என்பதுதான். அதனால் குதிரையும் இல்லை, புல்லும் இல்லை" என்றாளே பார்க்கலாம்!

– பி. சுமதி, அயனாவரம், சென்னை.

கைக்குட்டை இருக்கா?

தமிழ் பாட வேளை என்றால் எல்லோரும் தமிழ் வார்த்தைகளையே பயன்படுத்த வேண்டும் என்பது எங்கள் தமிழாசிரியரின் விருப்பம். ஒரு நாள் தமிழாசிரியர் என்னைக் கரும்பலகையை சுத்தம் செய்யச் சொன்னார். நான் சுத்தம் செய்யும்போது சாக்பீஸ் துகள்கள் என் மீது விழுந்தன. உடனே என் நண்பனிடம் "கைக்குட்டை இருக்கு?" என்று கேட்டேன். அதற்கு அவன் "இல்லையே! ரெண்டு கையும் நீளமாகத்தான் இருக்கு" என்றான். எனக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. பிறகு 'தூசியைத் துடைக்க கர்சீஃப் கேட்டேன்' என்று விளக்கினேன்.

– எம். மகேஸ், தாரமங்கலம்.



எது பெரியது?



ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். திடீரென ஒரு மாணவனை எழுப்பி, "மா, பலா, வாழையில் எந்தப் பழம் பெரியது?" என்று கேட்டார். உடனே அவன், "மா தான் பெரியது" என்றான். "எப்படிச் சொல்றே?" என்று கேட்டார் ஆசிரியர். "சார்! நீங்கதானே சொன்னீங்க 'மா' என்றால் பெரியது. அதாவது மாமலை – பெரியமலைன்னு சொன்னீங்க" என்றானே பார்க்கலாம்! ஆசிரியர் திகைத்து நின்றார்.

– க. சிவசக்தி, பத்தாம் வகுப்பு, துத்திப்பட்டு.

பழம் பெரியது?



எங்கள் பள்ளியில் நடந்தது!




பணவீக்கம் என்றால்....

ஒரு நாள் ஆசிரியர் பொது அறிவுப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது கடைசி வரிசையில் உட்கார்ந்து கொண்டிருந்த மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பிய ஆசிரியர், "பண வீக்கம் என்றால் என்ன?" என்று கேட்டார். திருதிருவென விழித்தவன் சிறிது யோசித்துவிட்டு, "நாம் பயன்படுத்தும் பணங்களில் சில வீங்கியது போல் தோற்றம் அளிக்கும். இதையே பண வீக்கம் என்று அழைக்கிறார்கள்" என்றான். வகுப்பே சிரித்தது!

– இரா. மாசிலாமணீஸ்வரி, சோழபுரம்.

பள்ளி நடக்குமா?


ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது பள்ளி ஊழியர் சுற்றறிக்கை கொண்டு வந்தார். "நாளை மாலை மூன்று மணிக்கு உள்ளூர் தலைவர் நம் பள்ளியில் மரம் நடுகிறார். இதை ஒட்டி கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. எனவே பள்ளியை சுத்தமாக வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்" என்று படித்து முடித்தார் ஆசிரியர். உடனே என் தோழி "அப்ப நாளைக்குப் பள்ளி சரியா நடக்காது" என்றாள். அருகிலிருந்த இன்னொரு தோழி "என்றைக்குத்தான் பள்ளிக் கூடம் நடந்திருக்கு? இதே இடத்தில்தான் இருக்குது" என்றவுடன் அனைவரும் சிரித்தோம்.




– ஜெ. கலா, துத்திப்பட்டு.

ஊர்வன எவை?

அறிவியல் வகுப்பு. என் நண்பனிடம் "ஊர்வனவற்றிற்கு ஒரு உதாரணம் சொல்" என்றார் ஆசிரியர். "பாம்பு சார்!" என்றான் அவன். இன்னொரு மாணவனை எழுப்பி இதே கேள்வியைக் கேட்டார் ஆசிரியர். அவனும் 'பாம்பு' என்று பதில் கூறினான். "ஏண்டா, எவ்வளவு ஊர்வன பார்த்திருப்பே, வேற உதாரணம் சொல்" என்றார். உடனே அவன், "ரயில் சார்!" என்றான். ஆசிரியருக்குக் கோபம் வந்தது. மறுநாள் இருபது முறை ஊர்வனவற்றை எழுதி வருமாறு தண்டனை அளித்தார்!



– பி. மூர்த்தி, ஒன்பதாம் வகுப்பு, துத்திப்பட்டு.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

கோகுலம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பருக்கு பரிசளிக்க வேண்டுமா? அப்படியானால் சந்தா செலுத்தலாமே? ஒவ்வொரு மாதமும் உங்களைத் தேடி வீட்டுக்கே வரும் கோகுலம்!

இந்த சந்தாப் படிவத்தைப் பூர்த்தி செய்து உடனே அனுப்பி வையுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் முதல் கதை!

வெடிகுண்டு!

ர. ஜெயகாந்த்

அருமையான காலை புலர்ந்தது. தனக்கு ஏற்பட உள்ள அபாயத்தை அறியாமலேயே தமிழகத்தின் தலைநகரான, சென்னை இன்னும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தது.

விடியற்காலை ஐந்தரை மணி.

சங்கர் எழுந்தான். வேகமாக குளித்துத் தயாரானான். பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் அவனுக்கு ஆறு மணிக்கு டியூசன். பக்கத்துத் தெருவில் இருக்கும் தன் நண்பன். டியூசனுக்குக் கிளம்பி விட்டானா என்பதை அறிய போன் செய்தான். போனில் கிராஸ் டாக் வந்து கொண்டிருந்தது. எரிச்சலடைந்த சங்கர் போனை வைக்க நினைக்கும் போது அந்த கிராஸ் டாக் அவன் கவனத்தை ஈர்த்தது.

"டாக்டர் குமார்! நீங்க சொன்னபடி பாம் தயாராயிருச்சு. அடுத்து நான் என்ன செய்யணும்?"

"குட். நகரின் மையத்துல இருக்கிற பதினாறு மாடி கட்டடத்தின் அடியில், யாருக்கும் சந்தேகம் வராதபடி வச்சிட்டு வந்துடு. சரியா பன்னிரண்டு மணிக்கு வெடிக்கணும். சரியா?"

"ம்... சரி. வச்சதுக்கு அப்புறம் உங்களுக்குப் போன் பண்றேன்."

"வேண்டாம். என் வீட்டுக்கு வந்துரு."

"யெஸ் சார்."

கிராஸ் டாக் உரையாடலைக் கேட்ட சங்கர் அப்படியே உறைந்து போனான். 'டாக்டர் குமார் யார்? ஒருவேளை பிரபல அணு ஆயுத விஞ்ஞானி குமாராக இருக்குமோ?' என்று யோசித்தான் சங்கர்.

'சே! இந்த நேரம்னு பார்த்து அப்பாவும் அம்மாவும் ஊரில் இல்லை. தனி ஆளா என்ன பண்றது? ஆனா ஏதாவது செய்தாகணுமே!' என்று யோசித்தவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

வேகமாக காவல் துறைக்கு போன் செய்து நடந்த விவரத்தைக் கூறினான்.

"இப்படியே புரளி கிளப்பி விடுறதே உங்களை மாதிரி ஆளுகளுக்கு வேலையாப் போச்சு. அதுவும் அணு ஆயுத விஞ்ஞானி மேலேயே பழி சொல்றியா? போனை வைடா" என்றது ஒரு குரல்.

சங்கருக்கு ஒன்றும் புரியவில்லை. டியூசனையோ, பள்ளி செல்வதையோ அவன் நினைக்கவேயில்லை. மனம் முழுவதும் வெடிகுண்டிலேயே இருந்தது.

ஒரு முடிவுக்கு வந்தவனாக வீட்டைப் பூட்டி விட்டு, சைக்கிளில் ஏறி விஸ்வம் மாமா வீட்டை அடைந்தான்.

"என்ன சங்கர், பள்ளிக்கூடம் போகலையா?" என்றார் விஸ்வம்.

"மாமா! நீங்க ராணுவத்திலே இருந்திருக்கிங்க. உங்களாலதான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும்"



என்றான் சங்கர் படபடப்புடன்.

"என்ன?" என்றார் மாமா.

சங்கர் விஷயத்தைக் கூறி முடித்தான். மாமாவே ஸ்தம்பித்துப் போனார். "என்னால வெடிகுண்டை முற்றிலுமாக செயலிழக்கச் செய்ய முடியுமான்னு தெரியலை. முயற்சி பண்றேன்" என்றார் மாமா.

"மாமா! நம்மால முடிஞ்சதை செய்துட்டு, போலீஸுக்கு 'பாம்' இருக்குன்னு தகவல் கொடுத்துருவோம்'' என்றான் சங்கர்.

"நல்ல யோசனை. மணி எட்டாயிருச்சு. சீக்கிரம் போகலாம் வா" என்ற மாமா கையில் சில கருவிகளை எடுத்துக் கொண்டு வண்டியில் ஏறினார்.

பதினைந்து நிமிடத்தில் இருவரும் அந்தக் கட்டடத்தை அடைந்தார்கள். ஒவ்வொரு இடமாகத் தேடினர். எங்கும் வெடிகுண்டு கண்ணில் படவில்லை. சோர்வுடன் உட்கார்ந்தனர்.

மணி ஒன்பதரை. சங்கர் படபடப்புடன் நோட்டமிட்டான். அவன் முகம் பிரகாசமானது.

"மாமா! அந்த வாட்டர் கூலருக்குப் பின்புறம் ஒரு கறுப்புப் பை இருக்கு" என்றபடி எழுந்து ஓடினான்.

"இரு சங்கர். நான் பார்க்கறேன்" என்ற மாமா மெதுவாகப் பிரித்தார். சில விநாடிகளில் மளமளவென்று வேலையை ஆரம்பித்தார்.

"சங்கர் நீ போய் போலீஸுக்குத் தகவல் சொல்லிட்டு வா" என்றார்.


சங்கர் போன் செய்துவிட்டுத் திரும்பினான்.

மணி பதினொன்றரை. மாமா களைப்புடன் நிமிர்ந்தார். "சங்கர் என்னால முடிந்ததை செய்துட்டேன். இதற்கு மேல் வெடிகுண்டு நிபுணர்களால்தான் செயல்பட முடியும்" என்றார் வருத்தத்துடன். சங்கர் கவலையடைந்தான்.

அப்போது 'தடதட'வென சத்தம் கேட்டது. காவல் துறையினர் வந்து குவிந்தனர்.

மாமாவும் சங்கரும் விஷயத்தை விளக்கினார்கள். பதினொன்று ஐம்பதுக்கு குண்டு செயலிழக்க வைக்கப்பட்டது.

எல்லோர் முகத்திலும் நிம்மதி ஏற்பட்டது. உடனே எல்லா இடங்களுக்கும் தகவல் அனுப்பி வைக்கப்பட்டது. குண்டு வெடித்த செய்தியைக் கேட்க ஆர்வமுடன் டீ.வி. முன் உட்கார்ந்



இருந்த குமாரும் அவரது கூட்டாளியும் கைது செய்யப்பட்டனர்.

மறுநாள் காலை. கதவு தட்டப்பட்டது. திறந்தான் சங்கர். எதிரில் அம்மாவும் அப்பாவும் நின்றிருந்தார்கள்.

“நியூஸ்ல உன்னைப் பற்றிச் சொன்னதும் ரொம்ப ரொம்ப பெருமைப்பட்டோம். சென்னையை அழிவிலிருந்து காத்திருக்கிறே! உடனே கிளம்பி வந்துட்டோம்” என்றார் அப்பா.

போன் அலறியது. அப்பா பேசி முடித்து வந்தார்.

“இந்த வருடத்தின் சிறந்த தேசபக்தர் விருது உனக்கும் விஸ்வத்துக்கும் தரப் போறாங்களாம்” என்றார் அப்பா மகிழ்ச்சியுடன்.

காலனி, பள்ளி, சென்னை, தமிழ்நாடு ஏன் இந்தியா முழுவதுமே சங்கர், விஸ்வம் மாமாவைப் பற்றியே பேச்சாக இருந்தது.



காதுகள் தாங்கக்கூடிய அதிகபட்ச அதிர்வு எவ்வளவு?



● ப. மகேஸ்வரமணி, சோழபுரம்.

? அலர்ஜி என்றால் என்ன, டாக்டர்?

! ஒத்துக் கொள்ளாமை! அதாவது சில பொருள்கள் நம் உடலுக்குள் செல்கின்ற பொழுது அவற்றை எதிரிகளாக நினைத்து உடல் செயல்படுவதை ஆங்கிலத்தில் 'அலர்ஜி' (Allergy) என்றும், தமிழில் 'ஒவ்வாமை' என்றும் கூறுகிறார்கள். இன்னும் சற்று விரிவாகக் கூறினால், உடலுக்குள் நுழைகின்ற சில புறப் பொருள்கள் ஒவ்வான்களாகச் (Antigens) செயல்படும்போது, அவற்றை எதிர்த்து நம் ரத்தத்தில் தற்காப்பு மூலங்கள் (Antibodies) உற்பத்தியாகின்றன. ஒவ்வான்களுக்கும் தற்காப்பு மூலங்களுக்கும் இடையில் நடக்கின்ற போராட்டத்தின் விளைவாக தும்மல், அரிப்பு, தடிப்பு, வீக்கம், மூச்சிறைப்பு போன்ற தொல்லைகள் தோன்றுகின்றன. இவை அலர்ஜியின் அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன.



● கா. பிரபு, வலிவலம்.

● கனக. முத்துச் சிதம்பரம்; கிழாய்.

? கை, கால்களில் உள்ள நகங்கள் சொத்தை ஆவதற்கு என்ன காரணம்? இதனைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

! 'ட்ரைக்கோஃபைட்டன் ரூப்ரம்' (Trichophyton Rubrum) என்ற காளான் கிருமிகள் நகங்களைத் தாக்கும் போது நகங்கள் சொத்தையாகின்றன. இதனைக் குணப்படுத்த களிம்புகள் அவ்வளவாக உதவாது. மாறாக, வாய்வழிக் காளான் கொல்லி மாத்திரைகளை சுமார் ஆறு மாதங்கள் முதல் ஓராண்டு வரை தொடர்ச்சியாக சாப்பிட்டு வந்தால் நோய் பூரணமாகக் குணமாகும். மேலும், நகங்களைச் சுத்தமாக வைத்திருந்தால் நகச் சொத்தை ஏற்படுவதில்லை; அடிக்கடி விரல்களைத் தண்ணீரில் முக்குவதைத் தவிர்க்க வேண்டும்; இயலாவிட்டால், விரல்களுக்குக் 'காப்புறை' (Gloves) அணிந்து கொள்ளலாம்.



● எம். கலைவாணி, தஞ்சாவூர்.

? வெட்டுக் காயங்கள் மீது ஈரத்துணியை வைத்துக் கட்டச் சொல்கிறார்களே, ஏன்? சாதாரணத் துணியைக் கட்டினால் தவறா, டாக்டர்?

! தவறில்லை, கலைவாணி. சாதாரணத் துணியை விட ஈரத்துணியால் அதிக நன்மைகள் கிடைக்கும் என்பதால் அப்படிச் சொல்கிறார்கள். உதாரணமாக, சாதாரணத் துணியில் காற்றுப் போகும் அளவிற்கு சிறு துளைகள் இருப்பது இயல்புதானே! அதே துணியை தண்ணீரில் முக்கிப் பிழிந்து விட்டால், ஈரம் காரணமாகத் துளைகள் நெருக்கமாகி, மூடிக் கொள்ளும். இந்தத் துணியைக் காயத்தின் மீது வைத்துக் கட்டும் பொழுது ரத்தம் கொஞ்சம் கூட வெளியேறாது. இன்னொன்று, ஈரத்துணியின் குளிர்ச்சி காரணமாகக் காயத்தைச் சுற்றியுள்ள ரத்தக் குழாய்கள் சுருங்கி விடுவதால் ரத்தக்கசிவு உடனடியாக நின்று விடும்.



● ஆர். வி. மயில்வாகனன், மதுரை – 14.

? நான் என் தலைமுடிக்கு வாரத்திற்கு ஒரு முறைதான் எண்ணெய் தேய்க்கிறேன். இதனால் முடிக்கு பாதிப்பு ஏற்படுமா? மேலும், முடிக்கு எண்ணெய் அவசியமா?

! தலைமுடிக்கு எண்ணெய் அவசியம்தான், தம்பி. தினமும் எண்ணெய் தேய்ப்பது நல்லது. இதனால் சில நன்மைகள் கிடைப்பது உண்மை. முடி வறண்டு போகாது. முடியில் சிக்கல் உண்டாகாது. தலையில் அழுக்கு சேராது. தலைமுடி 'பளிச்'சென்று பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அதே சமயம் தினமும் 'ஷாம்பூ' தேய்த்துக் குளிப்பதாக இருந்தால் எண்ணெய் அவசியமில்லை; காரணம், எண்ணெயால் கிடைக்கின்ற நன்மைகள் எல்லாமே ஷாம்பூவால் கிடைத்துவிடும். அதனால்தான்!

● காழி. ஆர். சீதாராமன், தென்பாதி.


? சராசரி மனிதனின் காதுகள் தாங்கக்கூடிய அதிகபட்ச அதிர்வு எவ்வளவு, டாக்டர்?

! சுமார் இருபது முதல் இருபதாயிரம் ஹெர்ட்ஸ் வரை உள்ள ஒலி அதிர்வுகளைக் காதுகள் தாங்கும். இதற்கும் அதிகமாக அதிர்வுகள் நுழைந்தால் காதுகள் இரையும்.

● முத்துச்சிதம்பரம், மணல்மேடு.

? கரப்பான் என்றால் என்ன? இதில் எத்தனை வகைகள்? இதனால் உடலில் அதிக பாதிப்புகள் ஏற்படுமா? தகுந்த சிகிச்சை என்ன?

! கரப்பான் (ECZEMA) என்பது ஒரு தோல் அழற்சி நோய். ஒவ்வாமையின் விளைவால் வருவது. ஆனால், தொற்றுநோயல்ல. மீன், கருவாடு, நண்டு, இறால், பசலை கீரை, கத்தரிக்காய், உருளைக் கிழங்கு, தக்காளி, பால் போன்ற உணவுகள், துணி நூலிழைகள், கவரிங் நகைகள், நிக்கல் ஆபரணங்கள் ஆகியவை நம் உடலுக்கு ஒத்துக் கொள்ளாத போது தோலில் கரப்பான் தோன்றும். தோல் சிவப்பது, அரிப்பு உண்டாவது, வீங்குவது, நீர்கோர்ப்பது போன்றவை கரப்பானின் முக்கிய அறிகுறிகளில் சில. கரப்பானால் உடலுக்கு அதிகமாக பாதிப்புகள் எதுவும் வராது என்றாலும் இது ஒரு நீடித்த நோயாக இருக்கக் கூடும். இந்த நோயில் இரு வகை உண்டு. தொடுதல் மூலம் வருவது முதல் வகை; தொடுதல் அல்லாத வழிகளில் வருவது அடுத்த வகை. ஒவ்வொரு வகைக்கும் சிகிச்சை வேறுபடும். ஆகவே, தோல் நோய் மருத்துவரை ஆலோசித்தால் கரப்பானுக்குத் தகுந்த சிகிச்சை கிடைக்கும்.



● ஆர். மணிமாறன், திருவில்லிபுத்தூர்.

? மஞ்சள் காமாலைத் தடுப்பூசி போட்டுக் கொண்டால் நம் வாழ்நாள் முழுவதும் காமாலை நோய் வராதா?

! மஞ்சள் காமாலையில் பல வகைகள். அவற்றில் ஒன்று, 'உயிர்க்கொல்லி' மஞ்சள் காமாலை. அதாவது 'ஹெபடைட்டிஸ்-பி' (HEPATITIS - B). இது உயிருக்கு மிகவும் ஆபத்து தரக்கூடியது. இதற்குத்தான் இப்பொழுது தடுப்பூசி போடுகிறார்கள். இந்தத் தடுப்பூசியை பிறந்த உடன் ஓர் ஊசியும் பிறகு முதல், ஆறாவது மாதங்களில் போட்டுக் கொண்டால் வாழ்நாள் முழுவதும் ஹெபடைட்டிஸ்-பி மஞ்சள் காமாலை வராது என்று உறுதியாகக் கூற முடியும். ஆனால், ஹெபடைட்டிஸ்-ஏ, ஹெபடைட்டிஸ் சி போன்ற மற்ற காமாலை நோய்கள் வராது என்று கூற இயலாது.



டாக்டர். கு. கணேசன்


இது என்ன கணக்கு?
கதை : சுதர்ஸன்
படம் : மகேஷ்
மோகன்! இங்கே வா.
என்னப்பா?
இதுல நாலு கிலோ அரிசி இருக்கு. அத்தை வீட்டில் கொடுத்துட்டு வர்றியா?
ம்... சரி!
ஐயோ! என்னால் இவ்வளவு சுமையைத் தூக்க முடியாதுப்பா?
இரு! உனக்கும் தம்பிக்கும் அரிசியைப் பிரிச்சுக் கொடுக்கறேன்!
இப்ப தூக்கிப் பாரு.
சுமையே தெரியலை!


மோகன்! இங்கிருந்து அத்தை வீடு ரெண்டு கி.மீ. தூரம்.
சரி நான் விளையாடிட்டு வரேன்!
இப்ப கிளம்பினால்தான் இருட்டுவதற்குள் திரும்பி வரலாம்!
அதுக்கென்ன?
கவலைப்படாதீங்கப்பா. நானும் தம்பியும்தானே போறோம்! ஆளுக்கு ஒரு கி.மீ. தூரம் நடந்தால் போதுமே!
என்னடா சொல்றே?
எல்லாம் உங்க அரிசிக் கணக்குதான்!



உங்கள் நூலகம்

பல்லவ நாட்டுச் சிறுவர்கள் – பூவை அமுதன், பக். 128, ரூ. 24/- சஞ்சீவியார் பதிப்பகம், வசந்தா அபார்ட்மெண்ட்ஸ், மடிப்பாக்கம், சென்னை - 600 091.

அனாதைச் சிறுவன் நல்லமுத்து தனது இணைபிரியா நண்பன் 'ராஜா' என்ற கழுதையோடு பல்லவ நாட்டை எதிரிகள் தாக்கத் திட்டமிடுவதை அறிந்து பல்வேறு ஆபத்துகளில் சிக்கி இறுதியில் நாட்டைக் காப்பாற்றி விடுவதே நாவல். நல்லமுத்துவுக்குத் தோழனாக நண்பன் ஒருவன் உதவுகிறான். படிக்கத் தொடங்கினால் முடிக்கும் வரை நாவல் விறுவிறுப்பாகச் செல்கிறது. குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய எல்லப்பா ரங்கம்மாள் அறக்கட்டளையின் வள்ளியப்பா நினைவுப் பரிசைப் பெற்றுள்ளது.

நம் கண்களே நம்மை ஏமாற்றுமா?

தென்கச்சி வழங்கும் நீதிக் கதைகள் – முதல் தொகுதி, பக்கம் 138, ரூ. 27/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.

வானொலி 'இன்று ஒரு தகவல்' புகழ் ஆசிரியரின் அருமையான 45 கதைகள் இதில் உள்ளன. மனதை நல்ல நெறிகளில் செலுத்தவும், குழப்பங்களுக்கு முடிவு கட்டவும் வழிகாட்டும் அருமையான கதைகள். புதிய மெருகுடன் கூடிய இக்கதைகள் மனித மனத்தை மேம்படுத்த வல்லவை.

அறிவியல் தகவல்கள் – முதல் தொகுதி, வாண்டு மாமா, பக் 96, ரூ. 25/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 600 017.

பறவைகள் வானில் 'ஏ' வடிவில் பறப்பது ஏன்? வீனஸ் கோள் ஏன் சூடாக உள்ளது? நம் கண்களே நம்மை ஏமாற்றுமாமே, உண்மைதானா? போன்று சிறுவர்கள் எழுப்பக் கூடிய பல வினாக்களுக்கு அறிவியல் அடிப்படையில் சுவையாக பதில்கள் தந்துள்ளார் பண்பட்ட ஆசிரியர். படங்களும் நூலுக்குச் சுவை ஊட்டுகின்றன.

இயற்கை, சமுதாயம், விஞ்ஞானம் – கே.கே. கிருஷ்ண குமார், பக். 112, ரூ. 25/- அறிவியல் வெளியீடு, ௪ 57-ஏ, 7வது மேற்குத் தெரு, காமராஜர் நகர், திருவான்மியூர், சென்னை - 41.

இந்த நூலை அறிவியல் உலகின் நுழைவாயில் என்று கூறலாம். இதில் தொடப்படாத பொருளே இல்லை. ஆனால் எல்லாம் இரத்தினச் சுருக்கம். இதை வைத்துக் கொண்டு தங்களுக்குப் பிடித்தமான பிரிவில் மேலாராய்ச்சியை அல்லது தகவல்களை விரிவாகத் தேடிக் கொள்ளலாம். சிறந்த தயாரிப்பு.

சிங்கப்பூர் – மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக். 124, ரூ. 23/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.


சிங்கப்பூரைப் பற்றிய எல்லாத் தகவல்களும் கொண்ட வழிகாட்டி நூல். அலுப்புத் தட்டாமல் படிக்கும்படி எழுதியிருப்பது சிறப்பாகும். படித்த பிறகு நாமும் போகலாமா என்ற ஆவல் எழாமல் இராது!

— ரே



போர்!

அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது முன்பு போர் தொடுத்தன. இப்போது இவ்விரு நாடுகளுடன் பிரான்ஸும் சேர்ந்து யூகோஸ்லாவியா நாட்டின்



மீது போர் தொடுத்துள்ளன. யூகோஸ்லாவியாவிற்கு ஆதரவாக ரஷ்யாவும் ஏவுகணைகளை அனுப்பி இருக்கிறது.




சச்சின் பதக்கம்


இந்த நூற்றாண்டின் கடைசி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்தில் மே மாதம் 14ந் தேதி தொடங்குகின்றன. இதைக் குறிக்கும் வகையில் சச்சின் டெண்டுல்கர் உருவம் பொறித்த தங்கப் பதக்கம் வெளியிடப்பட்டுள்ளது. இப்பதக்கத்தின் விலை ரூ. 4,500.

பூகம்பம்

வட இந்தியாவில் பல இடங்களில் பூகம்பம் ஏற்பட்டது. இதில் உத்திர பிரதேசத்தில் ஏற்பட்ட பூகம்பத்தால் ஏராளமானோர் உயிர் இழந்துள்ளனர்.




வீடுகள், பெரிய கட்டடங்கள் இடிந்துள்ளன. மக்கள் அச்சத்தில் இருக்கின்றனர்.



உலகைச் சுற்றியவர்கள்!

பலூனின் மூலம் பறந்து உலகைச் சுற்றி சாதனை படைத்துள்ளனர் இருவர். சுவிட்ச்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெர்ட்ராண்ட் பீக்கார்ட்டும் பிரிட்டனைச் சேர்ந்த பிரியன் ஜோன்ஸுமே இச் சாதனைக்குச் சொந்தக்காரர்கள்!

சூரிய கிரகணம்




இந்த நூற்றாண்டின் கடைசி சூரிய கிரகணம் ஆகஸ்ட் மாதம் 11ந் தேதி நிகழ இருக்கிறது. 1980 மற்றும் 1995ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. முழு சூரிய கிரகணம் பூமியின் ஒரு பகுதியில் நிகழ்ந்தால், மீண்டும் அதே பகுதியில் நிகழ்வதற்கான வாய்ப்புகள் குறைவு. 1995ஆம் ஆண்டு சூரிய கிரகணத்தை ராஜஸ்தானில் தெளிவாகப் பார்க்க முடிந்தது. ஆகஸ்ட் மாதம் நிகழவிருக்கும் சூரியகிரகணத்தை ருமேனியாவில் காணலாம்!

சாதனைச் சிறுமி!

இந்த மாதம் சாதனைச் சிறுவர்கள் பகுதியில் இடம் பெறுபவள் கோயமுத்தூரில் செயிண்ட் பிரான்சிஸ் ஆங்கிலோ இந்தியப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும் இரா. செண்பகப் பூங்குழலி.

நான்கு வயதிலிருந்தே பரத நாட்டியம் கற்கத் தொடங்கி ஒன்பது வயதில் அரங்கேற்றம் செய்திருக்கிறாள். இந்த மூன்றாண்டுகளில் கோயில் திருவிழாக்கள், பரத நாட்டிய போட்டிகள் என பல நிகழ்ச்சிகளில் பங்கேற்று பரிசுகளை வென்றிருக்கிறாள்.

இது மட்டுமின்றி மாறுவேடப் போட்டிகள், மோனோ- ஆக்டிங், கட்டுரைப் போட்டி, ரங்கோலி என பல விதத்திலும் தனது திறமையைக் காட்டி வருகிறாள்.



செண்பகப் பூங்குழலி படிப்பிலும் அதிக நாட்டம் உடையவள். இவளது படைப்புகள் சில கோகுலத்திலும் வெளியாகி இருக்கின்றன! செண்பகப் பூங்குழலியின் சாதனைகள் தொடர வாழ்த்துவோம்!

உலகக் கோப்பை - உங்களுக்கே!

நான் கண்ணன் வீட்டிற்குச் சென்ற போது, அவன் பிஸ்கட் பாக்கெட் உறைகளை எண்ணிக் கொண்டிருந்தான். "என்னப்பா, முன்னாடியெல்லாம் தபால் தலை, நாணயம்னு ஏதேதோ சேர்த்துக்கிட்டிருந்தே. இப்ப பிஸ்கட் கவர்கூட சேர்க்க ஆரம் பிச்சிட்டியா?" என்றேன்.


கண்ணன் சிரித்தான். "இது கலெக்ஷன் இல்லை; வேர்ல்டு கப் செலக்ஷனுக்காக!" என்றான். "என்ன?" என வியந்தேன்.

"ஒவ்வொரு பிஸ்கெட் உறைக்கும் குறிப்பிட்ட ரன்கள். நூறு ரன்கள் சேர்த்து கடையில் கொடுத்தால் ஒரு கிரிக்கெட் புக் கிடைக்கும். அதில் சுரண்டினால் வேர்ல்டு கப் பார்க்க இங்கிலாந்து டிக்கெட்!" என்று மீண்டும் சிரித்தான் கண்ணன்.

எனக்கும் சிரிப்பு வந்தது. "இதுவரை எத்தனை ரன்கள் சேர்த்திருக்கிறாய்?" என்றேன்.

"900 ரன்கள் சேர்த்து 9 கிரிக்கெட் புக் வாங்கினேன். எல்லாவற்றிலும் சுரண்டியதில் 'Try Again' வந்ததுதான் மிச்சம். கடைசியாய் இந்த 100 ரன்கள். இதிலும் தோல்வி என்றால் குளிர்பானங்கள் அளிக்கும் சலுகையில் இறங்க வேண்டியதுதான்" என்றான் சலிப்புடன்.

"சரிதான். கிரிக்கெட் ஜுரம் எல்லோரையும் பிடித்து விட்டது உண்மைதான்" என்று கூறி அங்கிருந்து 'ரன்' எடுத்தேன். உலகக் கோப்பையை எந்த நாடு கைப்பற்றுகிறதோ, அதைப் பற்றி கவலையில்லை. ரசிகர்களாகிய உங்களுக்குத்தான் - உலகக் கோப்பை நிகழ்வுகளின் உணர்ச்சி மயங்கள் அனைத்தும்!



• கிளைவ் லாயிட்



• இம்ரான்கான்

உலகக் கோப்பை தலைவர்கள்

கடந்த 24 ஆண்டுகளில் 5 கேப்டன்கள் உலகக் கோப்பையை வென்றிருக்கிறார்கள். மேற்கிந்தியத் தீவுகளின் கேப்டன் கிளைவ் லாயிட் இரண்டு முறை தொடர்ந்து வெற்றி பெற்று சாதனை படைத்தார் (1975 & 1979) இந்தியாவின் கபில்தேவ் 1983லும், ஆஸ்திரேலியாவின் ஆலன்பார்டர் 1987லும், பாகிஸ்தானின் இம்ரான்கான் 1992லும், இலங்கையின் அர்ஜுன ரணதுங்கா 1996லும் கோப்பையைக் கைப்பற்றினார்கள்.



• கபில்தேவ்



• ஆலன்பார்டர்



• ரணதுங்கா

கிளைவ் லாயிட் அணியினர் 1975, 1979 போட்டிகளின்போது ஒரு ஆட்டத்தில்கூட தோல்வியுறாமல் வெற்றிக்கொடி நாட்டினர். இந்த மகத்தான வெற்றிச் சங்கிலி 1983 போட்டிகளின்போது கபில்தேவ் அணியினால் உடைக்கப்பட்டது.

கிளைவ் லாயிட் போல கபில்தேவும் மகத்தான சாதனை புரிந்திருக்கிறார். 1983 உலகக் கோப்பை போட்டியின்போது ஜிம்பாப்வேக்கு எதிரான ஆட்டம் – இந்திய அணி 17 ரன்களைச் சேர்த்திருந்த போது 5 விக்கெட்டுகளை இழந்திருந்தது. வந்தார் கபில்தேவ்; பிடித்தார் மட்டையை; அடித்தார் ரன்களை; 175 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் அணிக்கு வெற்றி தேடித் தந்தார்.

1987 ஆம் ஆண்டு போட்டியின்போது

உலகக் கோப்பையின் சூப்பர் கேப்டன்கள்!			
யார்?	ஆடியது	வெற்றி	வெற்றிவிகிதம்
கிளைவ் லாயிட் (மேற்கிந்தியத் தீவுகள்)	17	15	88.23
கபில்தேவ் (இந்தியா)	15	11	73.33
ஆலன் பார்டர் (ஆஸ்திரேலியா)	16	11	68.75
இம்ரான்கான் (பாகிஸ்தான்)	22	14	63.63

(குறைந்தபட்சம் 15 ஆட்டங்கள் கேப்டனாக இருந்த நபர்களைக் கொண்டு இப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது.)

ஆஸ்திரேலியா வெல்லும் என எவரும் எதிர் பார்க்கவில்லை. ஆலன் பார்டரோ, அனுபவ மற்றவர். ஆனால் இளமைத் துடிப்பு மிக்க ஆஸ்திரேலிய அணியை வெற்றி பெறச் செய் தார். ஆலன்பார்டர் சரியாக ரன்கள் சேர்க் காவிடினும், அணியைத் திறம்பட ஆடச் செய்தார். லீக் போட்டிகளில் ஆடிய 8 ஆட் டங்களில் 7ல் ஆஸ்திரேலியாவிற்கே வெற்றி. இறுதிப் போட்டியில் 7 ரன்கள் வித்தியாசத் தில் இங்கிலாந்துக்கெதிராக வெற்றி.

1992இல் நியூசிலாந்துக்கெதிராகப் பெற்ற இரண்டு வெற்றிகள், பாகிஸ்தானை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றன.

1996 இல் இலங்கை, லீக் ஆட்டங்களில் பெற்ற தொடர் வெற்றிகள், அரையிறுதிப் போட்டிக்கு அதனை அழைத்துச் சென் றன. கல்கத்தா கலாட்டாவில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து- ஆஸ்திரேலி யாவை இறுதிப் போட்டியில் இலங்கை எளிதாக வென்று கோப்பையைப் பெற்றது.

வால்ஷ் கபில்தேவைத் துரத்துகிறார்!


கபில்தேவ் டெஸ்ட் கிரிக்கெட்டில் 434 விக்கெட்டுகள் வீழ்த்தி முதல் இடத் தில் இருப்பதை அறிவீர்கள். தற்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன் னாள் கேப்டன் கோர்ட்னி வால்ஷ் 400ஆவது விக்கெட்டை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். தற்போது ஆஸ்திரேலிய அணியுடன் டெஸ்ட் தொடரில் ஆடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் வால்ஷ் இடம் பெற்று, தொடர்ந்து விக் கெட்டுகளை வீழ்த்தி வருகிறார். உலகக் கோப்பை போட்டி நிறைவடைந்த பிறகு மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியா வரு கிறது. அப்போது வால்ஷ், கபில்தேவின் சாதனையை இந்திய மண்ணிலேயே முறி யடிப்பாரா? பொறுத்திருந்து பார்ப்போம்!

அக்ரமின் மூன்று சாதனைகள்!

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் கேப் டன் வாசிம் அக்ரம் ஹாட்ரிக் விக் கெட்டுகள் வீழ்த்தியது முதல் சாதனை.

இலங்கைக்கு எதிரான அடுத்த டெஸ்ட் போட்டியிலும் ஹாட்ரிக் விக்கெட்டுகள் வீழ்த்தியது இரண்டாவது சாதனை.

ஏற்கெனவே ஒருநாள் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட்டுகளை அக்ரம்



• வாசிம் அக்ரம்

வீழ்த்தியிருக்கிறார். ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் இரண்டிலும் ஹாட்ரிக் விக்கெட்டுகள் வீழ்த்திய ஒரே வீரர் அக்ரம் என்பது மூன்றாவது சாதனை.

— விளையாட்டுப் பையன்



• சில்வர் கேஸ்கேட் அருவி

கோடைக்காலம் வந்தாச்சு. பகல் நேரங்களில் வெளியில் தலைகாட்ட முடிவதில்லை. அவ்வளவு வெயில்!

பலர் இந்தக் கொளுத்தும் வெயிலில் இருந்து தப்பிக்க 2 – 3 வேளைகள் குளிப்பது, பழச்சாறு, குளிர்பானங்கள், இளநீர், மோர் போன்றவற்றை அருந்துவது, வெள்ளரி, தர்பூசணி போன்றவற்றைச் சாப்பிடுவது .எனப் பலவித பகீரத முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

இன்னும் சிலர் வெயிலில் இருந்து தப்பிக்கவும் கோடை விடுமுறையைக் கழிக்கவும் கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற மலைப் பிரதேசங்களுக்குச் செல்கின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்திலிருக்கும் கொடைக்கானலுக்கு நம் நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமானோர் வருகின்றனர்.

இது கடல் மட்டத்திலிருந்து 2,100 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. மலைக்குச் செல்ல பேருந்து, வேன் வசதிகள் உண்டு. எல்லாவற்றிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

கொடைக்கானலுக்குச் செல்லும் வழியும் பயணமும் மிகவும் வித்தியாசமான அனுபவத்தை நமக்குக் கொடுக்கக் கூடியது. உயர்ந்த மரங்



• ஏரி



• பூங்கா

விடுமுறைப் பயணம்...



• மனம் கவர் மலைகள்

களும் தாழ்ந்த பள்ளத்தாக்குகளும் மாறி, மாறி காட்சியளித்து நம்மை மகிழ்விக்கும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இங்கு சென்றால் மலையின் அழகை முழுமையாக ரசிக்கலாம். மற்ற காலங்களில் மலைகளில் பனி படர்வதால் இயற்கையின் அழகை முழுமையாகப் பார்க்க இயலாமல் போய் விடும்.

இங்குள்ள முக்கியமான இடங்களில் ஏரியும் ஒன்று. மூன்று மைல் அளவிற்குப் பரந்து விரிந்துள்ள ஏரியில் படகுச் சவாரி செய்வது திகட்டாத விஷயமாகும். பெடலிங் செய்யக்கூடிய படகை செலுத்துவது சுலபம். புதிதாய் படகுச் சவாரி செய்பவர்கள் துடுப்புடைய படகில் ஏறி செலுத்த முடியாமல் சுற்றிச் சுற்றி ஒரே இடத்தில் இருப்பது பலருக்கு வேடிக்கையான விஷயமாக இருக்கும்! படகுச் சவாரியின் போது ஏரியைச் சுற்றியுள்ள உயர்ந்த மரங்களும் அமைதியான சூழ்நிலையும் பனி மூட்டமும் சூழலை இனிமையாக்கும்!

எந்தச் சுற்றுலாத் தலத்துக்குச் சென்றாலும் குழந்தைகள் மிகவும் விரும்புவது 'Toy Train' தான்! இங்குள்ள ரயிலில் சிறிது தூரத்திற்குப் பயணம் செய்யலாம். ரயிலில் பயணிக்க குழந்தைகளுடன் பெரியவர்களும் போட்டி போட்டுக் கொண்டு ஏறுவதைக் காணலாம்!

இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் 'மலர் கண்காட்சி'யைப் பார்க்க இரண்டு கண்கள் போதாது! அத்தனை அழகு! விதவிதமான வண்ணங்களிலும் வடிவத்திலும் வேறு எங்கும் பார்க்க முடியாத அரிய பூக்கள் இங்கு இருக்கின்றன.

பச்சைப் பசேல் என்ற புல்வெளியுடன் கூடிய பூங்கா, பில்லர் ராக்ஸ் என்று அழைக்கப்படும் இரட்டைப் பாறைகள் மற்றும் இதுபோன்ற விநோதமான பாறைகள், நீர்வீழ்ச்சி, வானாராய்ச்சிக் கூடம் என கொடைக்கானலில் பார்க்க வேண்டிய இடங்கள் எத்தனையோ உண்டு.


மலையின் அழகை ரசிக்கும் போது அங்கு நிலவும் சுற்றுப்புறச் சூழல் கேட்டையும் கவனிக்க வேண்டியுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகையால் பல இடங்களில் பிளாஸ்டிக் பைகள், காகிதங்கள் என குப்பைகள் ஆக்கிரமித்து உள்ளன. இயற்கைச் சூழலை அமைதியாக ரசிக்க விடாமல் எங்கும் வியாபித்திருக்கின்றன கடைகள். ஆங்காங்கு வெட்டப்படும் மரங்கள் போன்றவற்றிற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்தால் கொடைக்கானல் இன்னும் மேன்மையடையும். வருங்கால சந்ததியினருக்கும் பயன்படும்.





• பில்லர் ராக்ஸ்

அட்டையில் :
ரேகா, அருணா
வண்ணப்படம் : **யோகா**





சதுரவடிவத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

1. படத்தில் காட்டியபடி தாளை வைத்து கீழிருந்து மேல்நோக்கி மடிக்கவும்.

2. தாள் முக்கோண வடிவத்தில் இருக்கும். வலது முனையை இடது முனையுடன் தொடும்படி மடிக்கவும்.

3. இப்போது சிறிய அளவில் இன்னொரு முக்கோணம் கிடைக்கும்.

4. படம் 4-ல் காட்டியபடி மடிக்கவும். அதேபோல் பின்புறமும் மடிக்கவும்.


5. படத்தில் காட்டியபடி வலது, இடது முனைகள் நடுக்கோட்டைத் தொடுமாறு மடிக்கவும். அதேபோல் பின்புறமும் மடிக்கவும்.

6. படம் 6-ல் காட்டிய உருவம் கிடைக்கும். மேல் உள்ள பகுதியைக் கீழ்நோக்கி மடித்து விடுங்கள்.

7. மடித்த பகுதியை ஒவ்வொன்றாக விரித்து விடுங்கள்.

இதோ பூ தயார். பல வண்ணக் காகிதங்களில் இப்பூக்களைச் செய்து பாட்டிலில் வைக்கலாம்.

காகிதத்தில் கலைவண்ணம்!



Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

அவள் எதிர்காலத்தை பற்றி நீங்கள் முன்கூட்டியே அறியமுடியாது ...



ஆனால் அதை பாதுகாக்க முடியும்.

ராஜ்லக்ஷ்மி

யூனிட் ப்ளான்-II

ஒரு பரிசை விடமேல், ஓர் எதிர்காலம்

சிறப்பம்சங்கள்

- 5 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்காகவே பிரத்தியேகமானது.
- குறைந்தபட்சம் ரூ.1500 முதலீடு. மேற்கொண்டு ரூ.500 பெருக்கு தொகைகளிலே. முதலீட்டுக்கு வரம்பு கிடையாது.
- பெண் குழந்தைக்காக, யாரேனும் ஒருதனி நபர் (பெற்றோர், உறவினர் அல்லது நண்பர்), ட்ரஸ்ட் , கூட்டுறவு சங்கம், கார்போரேட் பாடி, மத்திய அல்லது மாநில அரசாங்க நிறுவனங்கள் முதலீடு செய்ய முடியும்.
- ஒரு வயதுக்குள்ளோ அல்லது ஒரு வயது நிரம்பிய பெண் குழந்தையின் பெயரில் முதலீடு செய்யப்பட்ட ரூ.1500, 20 வருடங்களில் ரூ.15,000 ஆக வளர்ச்சி பெறக்கூடும். இந்த முதலீட்டின் திட்டத்தின்படி வரும் வளர்ச்சி பதிவு செய்யப்பட்ட வயதை பொறுத்து இருக்கும்.
- விண்ணப்பத்திற்கு ஒப்புதல் பெற்ற தேதியைக் கொண்டே திட்டத்தின் முதிர்வுத் தேதி கணக்கிடப்படும்.
- பெண் குழந்தை 18 வயது அடையும்போது, திட்டத்திலிருந்து விலகிக் கொள்ள உரிமை உண்டு.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் மேலான எதிர்காலத்திற்கு

இப்போது : விற்பனைக்காக திட்டம் மறுபடியும் வழங்கப்படுகிறது

மண்டல அலுவலகம் : 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன் : 517101.
கிளை அலுவலகங்கள் : • கோயம்புத்தூர் போன் : 214973 • சென்னை போன் : 517101, 517190
• மதுரை போன் : 738186 • திருச்சி போன் : 760060

063/99 C TAM B



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS / (S) 281/90 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka